Registered as a NewsPaper

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

விலை: ரூபா 7.00

# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

பக்கங்கள் – 12

நாதம் 15 | திருவள்ளுவர் ஆண்டு 2035 | ஆடி-14 | 29-07-2004 | வியாழக்கிழமை | ஓசை -162

கணேசா நகையகம்
தங்கநகை உலகில் தமக்கென தனியிடம் பதித்தவர்கள்
இல:123, பஜார் வீதி, வவுனியா. T.P.-024-2222464
இல:194, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். T.P.-021-2-25987
(சி-9943)

## அம்பாறை மாவட்ட மாவீரர் பெற்றோர்களுக்கு மரியாதைக் கொடுப்பனவு வழங்கும் வைபவம்

அம்பாறை மாவட்ட மாவீரர்களின் பெற்றோர்களுக்கு மரியாதைக் கொடுப்பனவு வழங்கும் வைபவம் நேற்றுக்காலை 11மணிக்கு தமிழீழ விடுதலைப் புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல் துறை பணி மனையின் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் த.குயிலின்பன் தலைமையில் நடைபெற்றது.

த.குயிலின்பன் தனது தலைமையுரையில் எமது விடுதலைப் போராட்டத்திற்கு உரமூட்டியவர்கள் எம் மாவீரர்களே. இவர்களின் தியாகத்தால் தான் எம் போராட்டம் இக்காலகட்டத்திலும் வலுப்பெற்றுச் செல்கின்றது. இம்முறையும் ஆடிமாதத்திற்கான கொடுப்பனவாக ஒவ்வொரு குடும்பத்திற்கும் ரூபா 6000 கொடுக்கப்படுகின்றது என்று கூறினார்.

இவ்வைபவத்தில் அம்பாறை மாவட்டத்தளபதி க.ஜனார்த்தன், மட்டு - அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன, மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் ஆ.தமிழ்ச்செல்வன் தலைமைச் செயலகத்தைச் சேர்ந்த அ.தனஞ்செயன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

மட்டு-அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் உரையாற்றுகையில்; பாலூட்டிச் சீராட்டி வளர்த்த பிள்ளைகளைத் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு அனுப்பி தமிழீழத்திற்குத் தியாகம் செய்துள் வீரர்கள். தமிழீழத்திற்காக அர்ப் பணிக்கப்பட்ட உங்கள் பிள்ளை கள் மாவீரராகி வரலாற்றேட்டிலே வரலாற்று நாயகர்களாகப் பதி வாகியுள்ளனர். தமிழர்களின் அவல நிலையைப் போக்குவதற்காகவே அவர்கள் தங்கள் உயிரைத் தியாகம் செய்துள்ளனர்.

மாவீரர் பெற்றோர்களின் துன்ப துயரங்களை நன்கு அறிந்த எமது தேசியத் தலைவர் இம் மரியாதைக் கொடுப்பனவை உங்களுக்

(12ஆம் பக்கம் பார்க்க)

# இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்க்க இலங்கையரே முயற்சி மேற்கொள்ளவேண்டும்

### - நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹெல்கேசன்

(கொழும்பு)

**இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இலங்கையர்களே முயற்சி மேற்கொள்ள வேண்டும். இதில் நோர்வே நாடு அனுசரணையையும், உதவிகளையும் மாத்திரமே வழங்கமுடியுமென அந்த நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசன் தெரிவித்துள்ளார். இலங்கைக்கான விஜயத்தை முடித்துக்கொள்ளும் முன்னர் கொழும்பில் செய்தியாளர்களுக்கு செவ்வியளித்த அவர் இரண்டு தரப்பினரும் மீண்டும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க நோர்வே கடுமையாக உழைக்கும் எனக் குறிப்பிட்டார்.**



அவர் மேலும் தெரிவிக்கையில் கிழக்கில் நடைபெறும் பிரச்சினைகள் பூதாகரமாக மாறுமுன்னர் அவற்றைத் தீர்த்துக்கொள்ளல் அவசியமாகும். போர் நிறுத்த உடன்படிக்கை என்பது நடந்த யுத்தத்தை முடக்கி வைப்பதேயொழிய அது இனப்பிரச்சினைக்கு முடிவு கட்டவில்லையென்பதை இலங்கை மக்கள் பலர் மறந்து விட்டார்கள். இதுவரை முடங்கிக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## சந்திரிகா-மன் மோகன்சிங் தாய்லாந்தில் சந்திப்பர்

சிறிலங்கா சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் இந்தியப்பிரதமர் மன்மோகன் சிங்கும் தாய்லாந்தில் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளதாகத் தெரியவருகிறது பங்களாதேஷ் இந்தியா, மியன்மார், சிறீலங்கா, தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கிடையிலான உயர்மட்ட சந்திப்பொன்று நாளையும் நாளை மறு தினமும் தாய்லாந்தில் இடம்பெறவுள்ளது.

இதில் பங்கேற்க சனாதிபதி சந்திரிகா, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் உட்பட பல முக்கிய அரசியற் பிரமுகர்கள் தாய்லாந்து பயணமாகிறார்கள். வங்காள விரிகுடாவை அண்டிய நாடுகளின் மாநாடு என்று அழைக்கப்படவுள்ள இச்சந்திப்பின் போது, இப்பிராந்தியங்களுக்கிடையிலான வர்த்தக பொருளாதார பாதுகாப்பு மேம்பாடுகள் குறித்து விரிவாக ஆராயப்படவுள்ளதுடன், இதுகுறித்து இந்நாடுகள் புரிந்துணர்வுடன் இணைந்து பணியாற்றுவது குறித்தும் விவாதிக்கப்படவுள்ளது. இச் சந்திப்பின் போது, நேபாளம், பூட்டான் ஆகிய இரு மேலதிக நாடுகள் இம் மாநாட்டுக் குழுவில் இணைக்கப்பட

(12ஆம் பக்கம் பார்க்க)

## சிறில.இராணுவத் தளபதியை நீதிமன்றில் ஆஜராக உத்தரவு

1996மற்றும் 97ஆம் ஆண்டு காலப்பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற் போன மூன்று இளைஞர்கள் தொடர்பான விசாரணைகளை இராணுவத் தளபதியை நீதிமன்றில் ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டுள்ளது.

யாழ். மாநகர எல்லைக்குட்பட்ட கொழும்புத்துறை கொய்யாத தோட்டப் பகுதியைச் சேர்ந்த மைக்கல் பேனாட்ஜோன்சன் மற்றும் குருநகர் பகுதியைச் சேர்ந்தவர்க

(12ஆம் பக்கம் பார்க்க)

## சிறிலங்காவில் சட்ட ஒழுங்கு சீர்குலைந்தது ஐ.நா.மனித உரிமைகள் ஆ.கு.தலையிட வேண்டும்

### -ஐ.நா மனித உரிமைகள் உப குழுவில் வலியுறுத்து

சிறிலங்காவில் சட்ட ஒழுங்கு நடைமுறை சீர்குலைந்துவிட்டது எனவும், உடனடியாக ஐ.நா. மனித உரிமைகள் உப ஆணைக்குழு இவ்விடயத்தில் தலையிட வேண்டும் எனவும் நேற்று முன்தினம் அமாவில் உரையாற்றிய இரு பிரதான ஐ.நா சபையின் அங்கீகாரம் பெற்ற சர்வதேச நிறுவனங்கள் குற்றஞ் சாட்டியுள்ளன. கடந்த திங்கள் முதல ஜெனிவாவில் ஐ.நா சபையின் மனித உரிமைகளுக்கான உப ஆணைக் குழுவின் 56 ஆவது அமர்வு ஆரம்பமானது. அனைத்துலக நாடுகளில் இருந்து தேர்வான சர்வதேச மனித உரிமைகள் நிபுணர்களை உறுப்பினர்களாகவும், அனைத்து நாடுகளையும் ஐ.நா அங்கீகாரம் பெற்ற சர்வதேச நிறுவனங்களையும் அவதானிகளாகவும் கொண்டு ஆரம்பமான இந்தக் கூட்டத் தொடரானது ஐ.நா சபையின் மனித உரிமைகளுக்கான ஆணைக்குழு

(12ஆம் பக்கம் பார்க்க)

### —யாழ். இல் காணாமல் போனோர் குறித்த வழக்கு—

## கோப்ரல் ராஜபக்ஷவை யாழ்.சிறையில் வைக்க உத்தரவு



1996 மற்றும் 97 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் அரியாலை பிரதேசத்தில் இளைஞர்களைக் கைது செய்து காணாமல் போன சம்பவம் தொடர்பாக முதலாம் எதிரியாக குறிப்பிடப்பட்ட இராணுவ கோப்ரல் ராஜபக்ஷவினை எதிர்வரும் ஓகஸ்ட் 4 ஆம் திகதி வரை யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்க மேல் நீதிமன்ற நீதவான் கே.பி.எஸ். வரதராசா உத்தரவிட்டுள்ளார்.

அரியாலைப்பகுதியில் 1996/97 ஆம் ஆண்டு காலப பகுதியில் படையினரால் (12ஆம் பக்கம் பார்க்க)

## தமிழீழ நீதி நிர்வாகத்துறையின் 7 ஆவது நீதிமன்றம் அடம்பனில் திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

தமிழீழ நீதி நிர்வாகத்துறையின் ஏழாவது நீதிமன்றம் நேற்று மன்னார் மாவட்டம் அடம்பன் பிரதேசத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை பத்து மணிக்கு தமிழீழ நீதிநிர்வாகத்துறையின் மன்னார் மாவட்டத்துக்கான நீதிமன்றம் தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன் . தியாகம் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பொதுச்சுடரை முதல்

(12ஆம் பக்கம் பார்க்க)




## புலிகள்-முஸ்லிம் பிரதிநிதிகள் தம்பிலுவில் சந்திப்பு

தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும், முஸ்லிம் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பொன்று நீண்டகால இடைவெளிக்குப்பின்னர் அம்பாறையில் நேற்று இடம் பெற்றுள்ளது. தம்பிலுவில் உள்ள தமிழீழ விடுதலைப புலிகளின் அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பணிமனையில் இச்சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

(12ஆம் பக்கம் பார்க்க)


# அடம்பனில் நடைபெற்ற நீதிமன்றத்திறப்பு விழாவில்...












(படங்கள் அ.லோகீசன்)

# காணி உரிமைப்பத்திரம் வழங்குமாறு திருமலை நகரசபை ஊழியர் போராட்டம்

(திருகோணமலை)

அரைநூற்றாண்டுக்கு மேலாக தாங்கள் வாழ்ந்து வரும் காணிகளுக்கு உரிமைப் பத்திரம் தரும்படி கோரி நேற்று திருகோணமலை நகரசபையின் பணிபுரியும் நூற்றுக் கணக்கான சுகாதாரத் தொழிலாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினார்கள். திருகோணமலை நகரசபை அலுவலகத்திற்கு முன்பாக டொக்யார்ட் வீதி-தபால்நிலையவீதி சுற்றுவளைவில் ஆண்களும் பெண்களுமாக சுகாதாரத் தொழிலாளர்கள் கைகளில் சுலோக அட்டைகளைத் தாங்கியவண்ணம் கோஷங்களை எழுப்பி ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

தொழிலாளர்களுடன் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் ஆர்ப்பாட்டத்தில் பங்குபற்றினார். முன்னாள் நகரசபை உறுப்பினர் ச.ரூபராசா மற்றும் தொழிற்சங்கங்களின் பிரமுகர்களும் ஆர்ப்பாட்டத்தில் பங்குகொண்டனர். இவ்வார்ப்பாட்டத்தைத் திருகோணமலை மாவட்டச் சமுதாயத் தலைவர்கள் ஒன்றியம் ஒழுங்கு செய்திருந்தது.

ஆர்ப்பாட்டம் தொடர்பாக ஒன்றியம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது, திருமலை மாவட்டத்தில் 1942ஆம் ஆண்டு தொடக்கம் வாழ்ந்துவரும் எமது மக்கள் திருமலை நகரசபையில் நகரசுத்தி தொழிலாளர்களாகக் கடமையாற்றி வந்துள்ளனர். கஸ்தூரிநகர், காந்திநகர், நாகராஜா வளவு, மனையாவெளி, பூம்புகார், பாலையூற்றுக் கிழக்கு, செல்வநாயகபுரம், உதயபுரி மேற்கு ஆகிய பகுதிகளில் இம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர். இன்றுவரை அரச மற்றும் நகரசபைக் காணிகளில் குடியிருந்து வரும் எம் மக்களுக்கு காணி உறுதிகளோ, காணி அனுமதிப்பத்திரங்களோ வழங்கப்படவில்லை. இது தொடர்பாக அரச அதிகாரிகள் மற்றும் திருமலையில் நடைபெற்ற நடமாடும் சேவையில் முறையிட்டும் பலன் கிட்டவில்லை. யூன்28ஆம் திகதி கடிதம் மூலம் பாராளுமன்ற உறுப்பினர்கள். அரச அதிகாரிகளுக்கு இறுதியாக அறிவித்தோம். அதற்கும் பலன் கிடைக்காததால் போராட்டத்தில் ஈடுபடுகின்றோம். என்று அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

ஆர்ப்பாட்டம் நண்பகல் 12.00 மணியளவில் முடிவுற்றது. அதன் பின்னர் ஒன்றியத் தலைவர்கள் அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி திருமலை நகர மண்டபத்தில் கூடி ஆராய்ந்தனர். திருமலை மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் ப. துரைரட்ணசிங்கம் மற்றும் நகர சபை அதிகாரிகள், உள்ளூராட்சித் திணைக்கள அதிகாரிகள் பங்குபற்றினர். (28)

## "செல்போன்" தவறிவிட்டது

23.07.2004இல் வட்டக்கச்சி மாயவனூர் சிவன் கோவிலுக்கும், இரணைமடுக் குளத் திற் கும் இடையில் கையடக்கத் தொலைபேசி (செல்போன்) மற்றும் பயண அனுமதி அட்டையும் தவறவிடப் பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையிலோ அல்லது வட்டக்கச்சி வன்னியன் தொலைத் தொடர்பு நிலையத்திலோ ஒப்படைக்கவும் தகுந்த சன்மானம் வழங்கப்படும் தகவல் ச.பவளம் புதுக்காடு வட்டக்கச்சி. (சி-10040)

## அறிவித்தல்

யாழ்.தொழில்நுட்ப நிலையம், தண்ணீரூற்று. றேடியோ மற்றும் இலத்திரனியல் திருத்தகம். மேற்படி நிலையத்தில் திருத்த வேலைக்கென தங்களால் வழங்கப்பட்ட பொருட்களைக் கடந்த 28.07.2004 தொடக்கம் கிழமை நாட்களில் 15.08.2004 வரையான காலப்பகுதியில் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுகிறீர்கள். (நிலையம் மூடப்படவுள்ளதால் ஒத்துழைப்பு நல்குமாறு வாடிக்கையார்களைக் கேட்டுக் கொள்கிறோம். தயவுடன் நிலைய நடத்துனர். (சி-9170)

## வரிவிளம்பரம்

**பி.எஸ்.ரி.தொழில் நுட்பம்**

கச்சேரி அருகாமை, கிளிநொச்சி. கணினிதரவூட்டுனர் தேவை கணினி அறிவுடைய TYpe setting செய்யக் கூடிய ஒருவர் தேவை. சனி,ஞாயிறு தினங்களில் (31.07. 2004 அல்லது 1.08.2004) 9மணிக்கும் 12 மணிக்கும் இடையில் நேரில் நிறுவனத்தில் தொடர்புகொள்ளவும் வேதனம், வேலை நடைமுறைகள் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். நிர்வாகம். (4855)

## கண்டெடுப்பு

தமிழீழ போக்குவரவுக்கழகம் பேருந்துப்பகுதி முல்லைத்தீவு சாலை நடத்துனரால் 22.03.2004 ஆம் நாள் முல்லைத்தீவு புளியங்குளம் பணியில் தங்கக் கைச்சங்கிலி ஒன்று கண்டெடுக்கப்பட்டு தமிழீழ போக்குவரவுக் கழக நடுவப்பணிமனை விசுவமடுவில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரித்துடையவர் உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் வந்து பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

### விமானம் நோட்டம்

(புதுக்குடியிருப்பு)

முல்லை. மாவட்டத்தின் பல பகுதிகளுக்கு மேலால் நேற்றுப் பகல் சிறிலங்கா விமானப் படைக்குச் சொந்தமான வேவு விமானம் நோட்டமிட்டுச் சென்றுள்ளது. (08)

## காணி விற்பனைக்குண்டு

A-9 நெடுஞ்சாலை கரடிப்போக்குச் சந்திக்கு அருகாமையில் பெற்றோல் செற் கட்டடமும், கிணற்று வசதியுடன் கூடிய 3 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. கரடிப்போக்கு ஏமர்சன் வீதி 4A வாய்க்கால் சந்திக்கு அருகில் (பராசக்தி தியேட்டர்) அருகாமையில் மில் கட்டடம் அமைந்த கிணறு வசதியுடன் கூடிய 1/2 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புக்கு:- **T.மகாலிங்கசிவம்,**
**கரடிப்போக்குச் சந்தி,**
**120, கண்டிவீதி,**
**கிளிநொச்சி.**

(4859)

## அறிவித்தல்

## உறுதி எழுத்தாளர்

வடக்கு கிழக்கு மாகாண மேல் நீதிமன்ற வலய பிரசித்த நொத்தாரிசு தா.அரியரத்தினம் ஆகிய எனது அலுவலகம் பூநகரியில் செயற்படுகின்ற போதிலும் கிளிநொச்சி மக்களின் சேவை கருதி ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் காலை 09.00 தொடக்கம் மாலை 04.30 மணிவரை கீழ்வரும் விலாசத்தில் எனது உப அலுவலகம் செயற்படும். இந்நாளில் உறுதி எழுதுபவர்கள், ஆலோசனை பெறுபவர்கள் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளுகிறேன். ஏனைய நாட்களில் பூநகரி அலுவலகத்திலோ அல்லது நாளாந்தும் பிற்பகல் 06.00 மணிக்குப் பின் இல-22, உருத்திரபுரம் D10 வதிவிடத்திலோ தொடர்பு கொள்ளலாம்.

உப அலுவலக முகவரி -
கலைவாணம் புகைப்படக்கலையக நிலையம்,
டிப்போவீதி,
கிளிநொச்சி.

தா.அரியரத்தினம்,
சமாதான நீதவான்,
பிரசித்த நொத்தாரிசு.

(4858)

# ஈராக்கில் பாரிய கார்க்குண்டுத்தாக்குதல்

# 70 பேர் உடல் சிதறிப் பலி; பலர் படுகாயம்

### -ஒரு மாதத்திற்குள் நடந்த மிகப் பெரும் கோரம்

(பாக்தாத்)

**ஈராக் தலைநகர் பாக்தாத்தில் நேற்று இடம் பெற்ற பாரிய குண்டுத் தாக்குதலில் 70 பேர் உடல் சிதறிப் பலியாகினர். மேலும் பலர் காயங்களுக்குள்ளாகினர்.**



பாக்தாத்தின் வடக்கே கக்குபா நகரில் பொலிஸ் நிலையம் ஒன்றிற்கு வெளியே இந்தக் கார்க்குண்டுத் தாக்குதல் நடைபெற்றது.

கார்க்குண்டுத்தாக்குதலானது ஈராக்கில் இடைக்கால நிர்வாகம் பொறுப்பேற்கப்பட்டு ஒரு மாதத்திற்குப் பின்னர் நடைபெற்ற; மிக மோசமான அழிவை ஏற்படுத்திய தாக்குதலெனத் தெரிவிக்கப்படுகிறது.

பாக்தாத் நகரிலுள்ள கக்குபா காவல் நிலையமொன்றில் இணைவதற்காக பலர் வரிசையில் நின்ற சமயம் இத்தாக்குதல் நிகழ்ந்துள்ளது.

இதன் போது தாக்குதல் நிகழ்ந்த இடத்திலேயே பெருமளவானோர் உயிரிழந்ததோடு படுகாயமடைந்த பலர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இது இவ்வாறிருக்க வழமையாக அமெரிக்க இராணுவத்தையும் ஈராக்கிய பாதுகாப்புப் படையினரையும் இலக்குவைத்தே பெரும்பாலான தாக்குதல்கள் நடைபெற்று வந்துள்ளன. ஆனால் இந்த தாக்குதல் வழமைக்கு மாறாக அமெரிக்க ஆதரவு பொலிஸ் படைக்கு ஆட்சேர்க்கும் நடவடிக்கைக்கு எதிராக நடைபெற்றுள்ள மிகப் பெரும் தாக்குதலாக கருதப்படுகிறது. இதேவேளை ஈராக்கின் புதிய இடைக்கால அரசாங்கம் பதவி ஏற்ற பின்னர் இடம் பெற்ற வன்முறைச் சம்பவங்களில் ஏற்கனவே நாற்பத்தி யேழு பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.



ஈராக்கின் மொசூல் நகரின் அருகே கார்க்குண்டு வெடிப்பினால் எழுந்த தீயை அணைக்கும் அமெரிக்க சிப்பாய்.

# அமெரிக்க படையினருக்கு உதவுவதை நிறுத்துக ஜோர்தானுக்கு தீவிரவாதிகள் எச்சரிக்கை

### -72 மணிநேர காலக்கெடுவும் விதிப்பு

(பாக்தாத்)

ஈராக்கிலுள்ள அமெரிக்கப் படைகளுக்கு உதவுவதை ஜோர்தான் உடனடியாக நிறுத்த வேண்டும் இல்லையேல் ஈராக்கில் இருந்து ஜோர்தானுக்கு செல்லும் வீதிகள் துண்டிக்கப்படும் என்று தீவிரவாதிகள் நேற்று முன்தினம் ஜோர்தானுக்கு மிரட்டல் விடுத்துள்ளனர்.

ஈராக்கிலுள்ள அமெரிக்கப் படைகளுக்கு ஜோர்தான் தேவையான பொருட்களை விநியோகம் செய்து வருகின்றது. இதற்கு கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ள தீவிரவாதிகள், உடனடியாக அமெரிக்க இராணுவத்திற்கு உதவுவதை ஜோர்தான் நிறுத்திக் கொள்ளவேண்டும். ல்லையேல் ஈராக்கிலிருந்து ஜோர்தானுக்கு செல்லும் பிரதான வீதிகள் அனைத்தும் துண்டிக்கப் படும் என்று எச்சரிக்கை செய்துள்ளனர்.

தமது கோரிக்கையினை ஏற்றுக் கொண்டு மூன்று நாட்களுக்குள் ஜோர்தான் தனது நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும் இல்லையென்றால் ஈராக்கிலிருந்து ஜோர்தான் செல்லும் பிரதான வீதிகளை தாக்கி அழிக்கப்போவதாகவும், ஜோர்தானிலிருந்து ஈராக்கிற்கு வரும் வாகனங்களை தாக்கி அழிக்கப்போவதாகவும் தீவிரவாதிகள் மிரட்டல் விடுத்துள்ளனர்.

# போர்த்துக்கல்லில் பெரும் காட்டுத் தீ 2000 ஏக்கர் காடுகள் அழிந்தன !

போர்த்துக்கல் நாட்டின் மலைப் பகுதியில் கடந்த நான்கு நாட்களாக காட்டுத் தீ பரவி எரிந்து வருகிறது. இதனை கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வரமுடியவில்லை என்று தீயணைப்புப் படையினர் கூறியுள்ளனர்.

போர்த்துக்கல்லின் மேற்கு வெஸ்பன் பகுதியில் உள்ளது அரபுஎய்யா மலை ஆகும். இங்கு கடந்த நான்கு நாட்களுக்கு முன்னர் காட்டுத்தீ பரவியது. காட்டு தீயை அணைக்க தீயணைப்பு படையினர் உடனடியாகச் சென்ற போதும் கட்டுப்படுத்த முடியவில்லை. இதுவரை சுமார் 2000 ஏக்கர் காடுகள் எரிந்து சாம்பராகியுள்ளன.

கிரிஸ் நாட்டிலிருந்தும் தீயணைப்புப் படையினர் அங்கு சென்று தீயணைப்பதில் தீவிர முயற்சிகளில் ஈடுபட்டபோதும் தீயை அணைக்க முடியவில்லை.

கடந்த நான்கு நாட்களாக காட்டுத்தீ எரிந்து வருவதால் அப் பகுதியில் 104 பாகை பரனைட் வெப்பநிலைக்கும் மேலாக வெப்பம் நிலவி வருகிறது.

# எகிப்திய பணயக்கைதி விடுவிப்பில் சந்தேகம் முஸ்லிம் நாடுகள் மீது அமெரிக்கா சீற்றம்

(வோஷிங்டன்)

ஈராக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்த எகிப்தியர் விடுதலை செய்யப்பட்டமை தொடர்பில் அமெரிக்காவுக்கும், எகிப்துக்கும் இடையில் முறுகல் ஏற்பட்டுள்ளது. அண்மையில் எகிப்தியர் ஒருவர் பணயக் கைதியாக தடுத்து வைக்கப்பட்டிருந்தார். எனினும் அவர் எவ்வித அறிவித்தலும் இன்றி பின்னர் விடுதலை செய்யப்பட்டிருந்தார். இந்தநிலையில் எகிப்திய நாடு பெருமளவு பணம் கொடுத்தே குறிப்பிட்ட எகிப்தியரை விடுதலை செய்ததாக அமெரிக்கா சந்தேகம் வெளியிட்டுள்ளது.

அவ்வாறு எகிப்து பணம் மூலம் தமது செயற்பாட்டை மேற்கொண்டிருக்குமானால் அது பயங்கரவாதத்துக்கு உதவும் செயலாகும் எனவும் பாரிய குற்றமாகும எனவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது. ஈராக் போராளிகள் விடயத்தில் முஸ்லிம் நாடுகள் பக்கச் சார்பாக நடந்துகொள்வதாகவும் அது குற்றம் சுமத்தியுள்ளது.

# பொருளாதாரத்தை மேம்படுத்த 7நாடுகள் இன்று கூடி ஆராய்வு


வங்கக்கடலை அடுத்துள்ள 7 நாடுகளுக்கிடையே பொருளாதார ஒத்துழைப்பை மேம்படுத்துவதற்கான உச்சிமாநாடு பாங்கொக்கில் இன்று நடைபெறுகின்றது.

இந்தியா, சிறிலங்கா, பங்களாதேஷ், மியன்மார், நேபாளம், பூட்டான், தாய்லாந்து ஆகிய நாடுகள் இன்றைய உச்சிமாநாட்டில் பங்கு கொள்கின்றன. இந்த ஏழு நாடுகளுக்கிடையேயும் வரியில்லாத வர்த்தகம், முதலீடுகள் அதிகரிப்பு, சுற்றுலா அதிகரிப்பு தொழில் நுட்ப ஒத்துழைப்பை அதிகரிப்பது ஆகியவற்றை மேம்படுத்துவது பற்றியே ஆராயப்படவுள்ளது.

## நம்பிக்கை

(லண்டன்)

உலகிலுள்ள அழியும் விலங்கினங்களின் மரபணுக்களைப் பதப்படுத்தும் முயற்சிகளில் இங்கிலாந்து ஆராய்ச்சியாளர்கள் ஈடுபட்டுள்ளனர். இதன் மூலம் அழியும் தறுவாயிலுள்ள விலங்கினங்களை குளோனிங் முறையில் உருவாக்க முடியும் என்றும் அவர்கள் நம்பிக்கை வெளியிட்டுள்ளனர்.



பங்களாதேஷில் தலைநகர் டாக்காவில் இருந்து 20 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள நாராயங்கன் பகுதியில் குடிநீர் பெறுவதற்காக வெள்ளத்தில் நீந்திச் செல்லும் சிறுமியொருத்தி.

# பறவைக் காய்ச்சல் அச்சுறுத்தல் ஆசியாவை விட்டு அகலவில்லை

### -10 நாடுகள் தீவிர ஆலோசனை

(பாங்கொக்)

தென்கிழக்காசிய பிராந்தியத்தைச் சேர்ந்த 10 நாடுகள் பாங்கொக்கில் பறவைக்காய்ச்சல் சம்பந்தமாக மூன்று நாள் மாநாடொன்றை நடத்துகின்றன. இதற்கு ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமும் உதவி வழங்கியுள்ளது. இந்த வருடத்தில் ஏற்கனவே 24 பேர் இந்நோயினால் இறந்துள்ளதனால் இதனை கட்டுப்படுத்துவதற்கும் இந்நோயிற்கான மருந்து வகையினைக் கண்டுபிடிப்பதற்குமென இம்மாநாடு நாடத்தப்படுகின்றது. இதற்கிடையில் வட வியட்னாமிலும் பறவைக் காய்ச்சல் நோய் பரவியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஏற்கனவே இந்நோயினால் பாதிக்கப்பட்ட தெற்கு வியட்னாமில் பறவைக் காய்ச்சல் நோய் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்று உறுதி மொழி வழங்கப்பட்டுள்ள போதிலும் நாட்டின் வடபகுதிக்கு இந்நோய் பரவியுள்ளது. தெற்கு வியட்னாமில் இந்நோயினை ஏற்படுத்தும் கிருமிகள் உள்ளதாக கருதப்பட்ட 50 ஆயிரத்திற்கும் அதிகமான கோழிகள் கொல்லப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.

வியட்னாமைத் தவிர தாய்லாந்து, சீனா ஆகிய நாடுகளிலும் பறவைக்காய்ச்சல் நோய் பரவியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# குறிப்பிட்ட கால எல்லைக்குள் காஷ்மீர் பிரச்சினைக்குத் தீர்வு

### -பாகிஸ்தான் மீண்டும் வலியுறுத்து

(இஸ்லாமபாத்)

காஷ்மீர் பிரச்சினைக்குக் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் தீர்வு காணப்படவேண்டுமென்று இந்தியாவிடம் மீண்டும் பாகிஸ்தான் வலியுறுத்தியுள்ளது. இஸ்லாமபாத்தில் நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய வெளியுறவு செயலக செய்தித் தொடர்பாளர் மௌசூத்கான், காஷ் மீர் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு பேச்சுவார்த்தையை நீடித்துக்கொண்டே செல்ல முடியும் என்றும் குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் இதற்குத் தீர்வுகாணப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளார். இரு நாடுகளிற்கும் இடையே உள்ள முக்கியமான பிரச்சினை காஷ்மீர் தான் என்று கூறிய அவர் இப்பிரச்சினையில் சிறப்புக் கவனம் செலுத்தி விரைவில் தீர்வு கண்டால் தான் ஏனைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணமுடியும் என்று கூறியுள்ளார்.

# மன்னாரில் விநியோகிக்கப்படும் நீரின் அளவு போதாதென முறையீடு

(மன்னார்)

**மன்னார் மக்களுக்கு விநியோகிக்கப்படும் நீரின் அளவு போதாதென்று பொதுமக்கள், தேசிய நீர் விநியோக வடிகால் அதிகார சபைக்கு முறைப்பாடு செய்துள்ளனர்.**

குழாய் மூலம் காலை இரண்டு மணித்தியாலமும் மாலைஇரண்டு மணித்தியாலமும் நீர் விநியோகம் செய்யப்பட்ட் போதிலும் வருகின்ற அந்நீரின் அளவு வெகு குறைவாகக் காணப்படுகின்றது.

ஒருவர் தனது வீட்டிற்கு நீர் இணைப்பைப் பெற வேண்டுமானால் 8000 ஆயிரம் ரூபா முதல் 15 ஆயிரம் ரூபா வரை செலுத்த வேண்டும். இதனடிப்படையில் அவர்கள் அக்கட்டனத்தை செலுத்தியும் கூட தங்களது சுயதேவையைப் பூர்த்தி செய்ய முடியாமல் கஷ்ரப்படுகிறார்கள்.

இது தொடர்பாக மன்னார் மக்கள் முறைப்பாடு செய்தும் அதனால் பயன் எதுவும் கிடைக்கவில்லையென்றும் தெரிவிக்கின்றனர். (மி)

# நெருப்புக் காய்ச்சல் அபாயம் குறித்து வவுனியா பி.மா.சு.ப. எச்சரிக்கை

வவுனியாவில் நெருப்புக் காய்ச்சல் பரவும் அபாயம் இருப்பதாக வவுனியா பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஏ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். தற்போது வவுனியா பொது மருத்துவமனையில் மூன்று பேர் நெருப்புக் காய்ச்சலுக்கு உள்ளாகி அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த மூன்று பேரும் யாழ். மாவட்டம் காரைநகர் பகுதிக்குச் சென்று வந்தவர்கள் என்றும் ஏற்கனவே காரைநகர் பகுதியில் ஒருமாத காலமாக இந்த நோய் இருப்பதாகவும் அவர் தெரிவித்தார் இந்த நோய் தொடர்பாக மக்களை விழிப்பாக இருக்குமாறும் கொதித்தாரிய நீரை மட்டும் பருகுமாறும் வீதி ஓரங்களில் விற்பனை செய்யப்படும் உணவுகளை உண்ணுவதை தவிர்க்கு மாறும் அவர் கேட்டுள்ளார். (21)

# வவு.வில் கண்ணிவெடி அகற்றல் குறித்து எத்தியோப்பியக் குழுவினர் ஆராய்வு

வவுனியா மாவட்டத்தில் கண்ணி வெடிகளை அகற்றுவது தொடர்பாக எதியோப்பிய நாட்டின் பிரதிநிதிகள் வவுனியாவில் ஆராய்ந்துள்ளனர். கடந்த திங்கட்கிழமை வவுனியாவுக்குவந்த இந்த குழுவினர் வவுனியாவின் நிலைப்பாடுகள் தொடர்பாக வவுனியா அரசஅதிபருடன் கலந்தா லோசித்துள்ளனர். எதியோப்பிய நாட்டின் கண்ணி வெடியகற்றலுக்குப் பொறுப்பான அதிகாரியான டெக்வோஸ் மென்குசா அடங்கிய நான்கு பேர் இந்த குழுவில் அடங்கியிருந்தனர். எதியோப்பிய நாட்டின் கண்ணிவெடி அகற்றும் பிரிவில் ஒரு இலட்சத்து 30 ஆயிரத்து 782 பேர் பணிபுரிந்து வருகின்றனர் இவர்களில் ஆண்கள்74 ஆயிரத்து 577 பேரும் பெண்கள் 56 ஆயிரத்து 205 பேரும் தற்போது கண்ணிவெடி அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுவருகின்றனர். இந்தக் குழுவினர் உலகலாவிய ரீதியில் 11 மில் லியன் கண்ணி வெடிகளை அகற்றியுள்ளனர் அத்துடன் இந்தக் குழுவினரால் உலகளாவிய ரீதியில் 1.372 மில்லியன் சதுரமீட்டர் பரப்பளவு சுத்தம் செய்யப்பட்டுள்ளதெனத் தெரிவிக்கப்படுகிறது. கண்ணி வெடி அகற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டு இருந்த வேளையில் 19 பேர் இறந்தும் 87 பேர் காயம் அடைந்தும் உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. இவர்களின் பணிகளைவிரைவாக ஆரம்பிப்பது தொடாபாகவும் ஆராயப்பட்டுள்ளது. (21)

## கொடி வாரம் திங்கள் ஆரம்பம்

நூற்றாண்டு பழைமை வாய்ந்த திருகோணமலை அரசாங்கப் பொது வைத்தியசாலையின் அபிவிருத்திக்கு உதவுமாறு ஆஸ்பத்திரிக் குழு கடந்த திங்கள் கொடிவாரம் ஒன்றை அங்கு அங்குராப்பணம் செய்தது. அத்துடன் மூன்று தொலைக்காட்சிப் பெட்டிகளையும் ஆஸ்பத்திரி நிர்வாகத்திடம் ஆஸ்பத்திரிக்குழு ஒப்படைத்தது.

இந் நிகழ்வுக்கு ஆஸ்பத்திரிக் குழுத் தலைவர் டாக்டர் கு.ஹேமச் சந்திரா தலைமை வகித்தார்.

# புதுக்குடியிருப்பில் பொதுக்கிணறு பாவனைக்குத் தடை விதிப்பு

புதுக்குடியிருப்பு சுவையூற்று வீதி 10ஆம் வட்டாரத்தில் சுவையூற்றுக்கு மிக அருகில் அமைந்துள்ள பொதுக் குடிநீர்க் கிணறு தற்போது பாவனைக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதாக புதுக்குடியிருப்புப் பிரதேச பொது சுகாதாரப் பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் தெரிவிக்கும் போது அப்பகுதியைச் சேர்ந்த மக்களில் பலருக்கு வயிற்றோட்டம் ஏற்பட்டதன் விளைவாக மேற்படி கிணற்று நீரைஎடுத்துகொழும்புக்குக் கொண்டு சென்றுபரிசோதனை மேற்கொண்ட போது இக்கிணற்று நீர் மனித மலத்தினால் மாசடைந்துள்ளமை தெரியவந்துள்ளது எனக் குறிப்பிட்ட அவர் இதனை அடுத்தே மேற்படிக் கிணற்று நீரைப்பாவனைக்கு தடைசெய்யப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டார்.

மேற்படிக்கிணற்றுக்கு பக்கமாக அமைந்திருந்த தற்காலிக மலகூடத்தாலேயே இந் நிலை ஏற்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (08)

## புதிய நூலகம் திறப்பு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி சிவநகர் அ.த.க. பாடசாலையின் புதிய நூலகக் கட்டடம் மற்றும் சிறுவர் பூங்கா திறப்பு விழா இன்று காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ளது.

பள்ளி முதல்வர் த.மனோகரன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில், கிளி.வலயக்கல்விப் பணிப்பாளர் ப.அரியரத்தினம் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு புதிய நூலகத்தினையும் சிறுவர் பூங்காவினையும் திறந்து வைக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ,கு)

## உள்ளூராட்சி வார நிகழ்வு பிற்போடல்

பச்சிலைப்பள்ளிப் பிரதேச சபையினால் நாளை வெள்ளிக் கிழமை நடாத்தப்பட விருந்த உள்ளூராட்சி வார இறுதி நிகழ்வு தவிர்க்க முடியாத காரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது என பளைப் பிரதேசசபைச் செயலாளர் அறிவித்துள்ளார். நிகழ்வின் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் அவர் அறிவித்துள்ளார்.

## கூட்டம்

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்ட கல்விக் குழுக் கூட்டமும், சுகாதாரக்குழுக் கூட்டமும் எதிர்வரும் ஓகஸ்ட் 3ஆம் திகதியன்று கிளி. மாவட்ட அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அன்றைய தினம் 9.30 மணிக்கு கல்விக்குழுக் கூட்டமும் அதனைத் தொடர்ந்து சுகாதாரக்குழுக் கூட்டமும் நடைபெறுமெனவும் அன்றை தினம் சம்பந்தப்பட்ட திணைக்கள அதிகாரிகள் மற்றும் அரச, அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளை மேற்படி கூட்டத்திற்கு தவறாது சமுகமளிக்கும் வண்ணம் கிளி. அரசஅதிபர் தி.இராசநாயகம் வேண்டுகை விடுத்துள்ளார். (சோ.கு)

## ஆலய வருடாந்த திருநாள் ஆரம்பம்

முல்லைத்தீவு புனித இராயப்பர் ஆலய வருடாந்த திருநாள் கடந்த 23.07.2004 அன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியுள்ளது. எதிர்வரும் 01 ஆம் திகதி திருப்பலியுடன் நிறைவடையும் என முல்லை பங்குத்தந்தை ஜேம்ஸ் பத்திநாதர் தெரிவித்தார். (28)

-கிளி. வலயக்கல்விப் பணிமனையில்-

# கணனிப் பயிற்சிநெறிக்கான பயிற்சியாளர்கள் தெரிவு

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி வலயக் கல்விப் பணிமனையின் முறைசாராக் கல்விப் பிரிவினால் இலவசக் கணனிப் பயிற்சி நெறிக்கான பயிற்சியாளர்கள் தேர்வு கிளி.வலயக் கல்விப் பணிமனையில் நடத்தப்படவுள்ளது.

கிளி.வலயக்கல்விப்பணிமனையில் ஓகஸ்ட் மாதம் 2ஆம்திகதி காலை 9.00மணிக்கு நடைபெறவுள்ள மேற்படி தேர்விற்கு வருகை தருவோர் க.பொ.த(சா.த)பரீட்சையில் தமிழ் மொழி உட்பட ஆறுபாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டுமெனவும், சுயவிபர விண்ணப்பப்படிவம், பிறப்புச்சான்றிதழ்,தேசிய அடையாள அட்டை, கல்வித்தகைமைச் சான்றிதழ், மற்றும் பொருத்தமான ஆவணங்களின் மூலப்பிரதிகளுடன் தவறாது சமூகமளிக்கும் வண்ணம் கிளி.வலயக் கல்விப்பணிப்பாளர் ப.அரியரத்தினம் வேண்டியுள்ளார். (சோ.கு)

# கௌதாரி முனை கிராம அபிவிருத்தி தொடர்பான முக்கிய கலந்துரையாடல்

பூநகரி பிரதேசசெயலர் பிரிவில் உள்ள கௌதாரி முனை கிராமத்தின் அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் இன்று பிற்பகல் 1.00 மணிக்கு கௌதாரி முனை கிராம அபிவிருத்தி சங்க மண்டபத்தில் நடைபெறும். அக்கலந்துரையாடலில் அரச அதிபரும் கலந்து கொள்வார் எனவும் பொது மக்கள் அனைவரும் கலந்து ஆலோசனை வழங்குமாறும் பிரதேச செயலர் கேட்டுக்கொள்கின்றார். (34)

# பிரஜாவுரிமைப் பதிவற்றோருக்கு பதிவுகள் மேற்கொள்ள நடவடிக்கை


(அலுவலகசெய்தியாளர்)

இதுவரைகாலமும் பிரஜாவுரிமைப் பதிவுகளற்று கிளிநொச்சி மாவட்டத்தில் வதியும் இந்திய வம்சாவளிப் பிரஜைகளுக்கு பிரஜாவுரிமை வழங்குவதற்கான நடவடிக்கைகளை யு.என்.எச்.சி.ஆர். நிறுவனம் தற்போது மேற்கொண்டு வருகின்றது.

இதன் முன் நடவடிக்கையாக நேற்று முன்தினம் கிளிநொச்சி மேலதிக அரச அதிபர் நா.வேதநாயகன் தலைமையில் அரச செயலக மண்டபத்தில் கருத்தரங்கு இடம் பெற்றது.

யு.என்.எச்.சி.ஆர். பிரதிநிதி எட்வாட்பென்சன், மற்றும் யு.என்.எச்.சி.ஆர். நிறுவன பிரதிநிதிகள், கிளி கரைச்சி, கண்டாவளை, பளை, பூநகரிப் பிரதேச உதவி அரச அதிபர்கள், இ.தொ.க. பாராளுமன்ற உறுப்பினர் யோகராஜன், மற்றும் துறைசார் அதிகாரிகள் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

இக்கருத்தரங்கில் எடுத்துக் கொண்ட தீர்மானத்திற்கமைவாக



எதிர்வரும் ஓகஸ்ட் 9ஆம் திகதியன்று கிளிநொச்சி மாவட்டத்தில் வதியும் பதிவுகள் மேற்கொள்ளாத இந்திய வம்சாவளியினருக்கு பிரஜாவுரிமை வழங்குவதற்கான பதிவுகள் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் பிரதேச ரீதியாக மேற்கொள்ளப்படவுள்ளது. (சோ.கு)

# மாகாண பிள்ளைநேய அபிவிருத்தி நிலையங்களின் கண்காட்சி திருமலையில்

வடக்கு கிழக்கு மாகாணத்தில் முதற்தடவையாக நடத்தப்படும் மாகாண பிள்ளைநேய அபிவிருத்தி நிலையங்கள் கண்காட்சி திருகோணமலையில் நாளையும், நாளை மறுதினமும் நடைபெறவிருக்கின்றது. இக்கண்காட்சியில் மன்னார், வவுனியாதெற்கு, திருகோணமலை, மூதூர், கந்தளாய், மட்டக்களப்பு, கற்குடா, பட்டிருப்பு, கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று, அம்பாறை, மகாஓயா, தெஹியத்த கண்டிய ஆகிய கல்வி வலயங்கள் பங்குபற்றவுள்ளன.

ஏற்கனவே வலயமட்டத்தில் கண்காட்சிக்கு வைக்கப்பட்டு தெரிவுசெய்யப்பட்ட ஆக்கங்கள் மாகாண மட்டக் கண்காட்சியில் வைக்கப்படும். கண்காட்சியில் பெற்றோர், ஆசிரியர்கள் மற்றும் குழந்தைகளுடைய ஆக்கங்களும் காட்சிப்படுத்தப்படும். அத்தோடு மாதிரி முன்பள்ளி அமைப்பு, கற்றல் நிலையங்கள், விளையாட்டு முற்றம், விஞ்ஞான சிறிய பரிசோதனைகள், முன்பள்ளி வெளியீடுகள் காட்சிப்படுத்தப்படும்.

இருநாள் கண்காட்சியின் அங்குரார்ப்பண நிகழ்வில் காலை 9.30 மணிக்கு வடக்கு கிழக்கு மாகாண பிரதம செயலாளர் எஸ். இரங்கராஜா பிரதமவிருந்தினராகப் பங்குபற்றுவார். மாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் இ.தியாகலிங்கம் தலைமை வகிப்பார். கண்காட்சி ஏற்பாடுகளை மாகாணக் கல்வி அமைச்சின் சிரேஷ்ட உதவிச்செயலாளர் எஸ்.மகாலிங்கமும் உதவிக்கல்விப்பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையாவும் மேற்கொண்டு வருகின்றனர். வடக்கு கிழக்கு மாகாணத்தின் ஏனைய கல்வி வலயங்களில் உள்ள பிள்ளைநேய அபிவிருத்தி (முன்பள்ளி) நிலையங்களுக்கான கண்காட்சி எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்தில் யாழ்ப்பாணத்தில் நடத்தப்படும் என்று ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (25)

## சிரமதானம்

(அக்கராயன்)

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டுகோணாவில் கிராம சேவகர் பிரிவில் இன்று சிரமதானப் பணி ஒன்று கோணாவில் பாடசாலை வளாகத்தில் நடைபெறவுள்ளதால் இக்கிராம மக்களைத் தவறாது சமுகமளிக்குமாறு கிராம சேவகரின் செய்திக் குறிப்பொன்று தெரிவிக்கின்றது. (15)

# ஒரு இலட்சத்து 19 ஆயிரம் குடும்பங்களுக்கு ஆறு மாதங்களாக நிவாரணமில்லை!

(வடமராட்சி)

**இடப்பெயர்வு மற்றும் தொழில் இழப்புக்காரணமாக பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களுக்கான உலர் உணவு நிவாரணம் கடந்த ஆறு மாதங்களுக்கு மேலாக யாழ். மாவடடத்தில் வழங்கப் படாதிருப்பதால் அக்குடும்பங்கள் பெரும் நெருக்கடிகளுக்கு உள்ளாகியுள்ளன.**

இவ்வாண்டின் சனவரி மாதத்திற்குரிய உலர் உணவு நிவாரணக் கொடுப்பனவு மட்டும் இதுவரை வழங்கப்பட்டுள்ள போதும் பெப்ரவரி மாதம் முதல் ஜுலை மாதம் வரையான மாதங்களுக்கான உலர் உணவு நிவாரணக் கொடுப்பனவே இதுவரை வழங்கப்படாதுள்ளன.

படையினரின் அதி உயர் பாதுகாப்பு வலய ஆக்கிரமிப்பினாலும், கண்ணிவெடி புதைக்கப்பட்ட பிரதேசங்கள் என்பவற்றாலும் உள்ளக இடப் பெயர்விற்குள்ளாகி, முகாம்கள் மற்றும் உறவினர் வீடுகளில் வசிக்கும் குடும்பங்கள், இடம்பெயர்ந்து வெளிமாவட்டங்களில் வசித்த பின் தற்போது குடாநாடு திரும்பியிருக்கும் குடும்பங்கள் மற்றும் தொழில் வாய்ப்பை இழந்த குடும்பங்களென சுமார் ஒரு இலட்சத்து 19 ஆயிரம் குடும்பங்கள் தற்போது நிவாரணத்தை நம்பியே வாழ்ந்து வருகின்றன.

எனினும் புதிய அரசு இவ் உலர் உணவு நிவாரணம் பெறும் குடும்பங்களின் எண்ணிக்கையினை 35%ஆக மட்டுப்படுத்தப் போவதாக முன்னர் அறிவித்திருந்தது. எனினும் பல தரப்பினதும் எதிர்ப்புகளையடுத்து, இயல்பு நிலை தோன்றும் வரை நிவாரண வெட்டை தற்காலிகமாக நிறுத்தி வைப்பதாக சனாதிபதியின் பேச்சாளர் ஹரீம் பீரிஸ் அப்போது அறிவித்திருந்தார்.

எனினும் இன்றுவரை பெப்ரவரி மாதம் தொடக்கமுள்ள காலப் பகுதிக்கான உலர் உணவு நிவாரணத்தை வழங்குவதற்கான அனுமதி யாழ்.செயலகத்திற்கு கிடைக்கவில்லையென செயலக வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

இதற்கான அனுமதியினைக் கோரி புனர்வாழ்வு மற்றும் அகதிகள் மீள்குடியமர்வுகை அமைச்சிடம் தாம் விண்ணப்பித்திருப்பதாக தெரிவித்த செயலக அதிகாரிகள், அவ் அனுமதி கிட்டிய பின்னரே நிவாரண விநியோகத்திற்கான அரிசி உள்ளிட்ட உலர் உணவுப் பொருட்களை தாம் கொள்வனவு செய்யக் கூடியதாக இருக்கும் எனவும் மேலும் தெரிவித்தனர். (27)

## பார்வையிட ஏற்பாடு

இறைச்சிக்கு வெட்டப்படும் ஆடு, மாடுகளை 24 மணிநேரமும் மக்கள் பார்வைக்கு வைக்க சாவகச்சேரி நகரசபை முடிவெடுத்துள்ளது. இதன் மூலம் கள்ள மாடுகள் வெட்டப்படுவதைத்தடுக்கவும் மாடுகள் நோய் தாக்கியுள்ளனவா என கண்டறியவும் இது உதவும் எனத் தெரியவருகிறது.(28)

## யாழ்.உயர் பாதுகாப்பு வலயம் குறித்து ஆராய இராணுவ உயர்குழுவரும்

யாழ்.குடாநாட்டிலுள்ள இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் குறித்து ஆராய்வதற்காக சிறிலங்கா இராணுவ அதிகாரிகள் அடங்கிய உயர் மட்டக்குழு ஒன்று அடுத்த வாரமளவில் யாழ்ப்பாணத்திற்கு வருகை தரவுள்ளதாகத் தெரியவருகிறது.

இராணுவத்தளபதி லெப். ஜெனரல் சாந்தகொட்டேகொடவின் ஏற்பாட்டில் யாழ். வரும் இவர்கள் இராணுவ அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் சட்டரீதியாக சாத்தியப்பாடு உடையனவா என்பது குறித்து பலதரப்பட்டோரையும் சந்தித்து ஆராய்வதுடன் பாதுகாப்பு வலயங்களால் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், பாதிக்கப்பட்டுள்ள பிரதேசங்கள் என்பவற்றையும் நேரில் பார்வையிடுவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (33)

## கடத்திவரப்பட்ட பார ஊர்தி உதிரிப் பாகங்களாக மீட்பு

வவுனியாப் பகுதி யிலிருந்து கடத்தி வரப்பட்ட பார வூர்திஒன்று உதிரிப்பாகங்களாக் கப்பட்ட நிலையில் யாழ்ப்பாணத் தில் விற்பனைசெய்யப்பட்டமை நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. வவுனியவைச் சேர்ந்த வி. குமாரவேல் எனும் நபருக்குச் சொந்தமான பாரவூர்தியே உதிரிப்பாகங்களாக்கப்பட்ட நிலையில் கல்வியங்காட்டுப் பகுதியிலுள்ள வாகன திருத்துமிடம் ஒன்றிலிருந்து பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

வவுனியாவிலிருந்து ஒரு வருடத்திற்கு முன்னர் வாடகைக்கென அமர்த்தப்பட்ட இப்பாரவூர்தி யாழ்ப்பாணத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

இந்நிலையில் வாகனம் திரும்பாததையடுத்து பொலிசில் உரிமையாளர் செய்தமுறைப்பாட்டினையடுத்து, விசாரணையினை மேற்கொண்ட வேளையில் உதிரிப் பாகங்களாக்கப்பட்டு வாகனம் விற்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (27)

## கூட்டம் கூட்டமாகவரும் குரங்குகளால் பயிரழிவு

(தென்மராட்சி)

தென்மராட்சியில் உள்ள சாவகச்சேரி, கல்வயல், கொடிகாமம், மீசாலை போன்ற பிரதேசங்களில் குரங்குகளின் தொல்லை அதிகரித்திருப்பதால் அப்பகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி பிரதேச விவசாய காணிகளினுள்ளும், காய்கறித் தோட்டங்களினுள்ளும் கூட்டம் கூட்டமாகப் பிரவேசிக்கும் குரங்குகள் அங்கு விளைவிக்கப்படும் பயிர்களை நாசம் செய்கின்றன.

இதனால் தாம் பெரும் இழப்புக்களை எதிர் கொண்டு வருவதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.. (28)

## யாழ்.கலாஜோதி சனசமூக நிலையத்தை நிர்வாகிகளிடம் வழங்க படையினர் மறுப்பு

யாழ். தட்டாதெருச்சந்தியிலுள்ள சனசமூக நிலையத்தை இயங்க வைப்பதற்கு படையினர் பெரும் தடையாக இருந்து வருவதாக அச் சனசமூக நிலைய நிர்வாகத்தினர் கவலை தெரிவிக்கின்றனர்.

1995ஆம் ஆண்டில் இடம் பெற்ற இராணுவ ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்படி சந்தியிலுள்ள கலாஜோதி சனசமூக நிலையத்தை படையினர் தமது மினி முகமாகப் பயன்படுத்தி வந்தனர்.

பின்னர் அரசு - புலிகளுக்கு மிடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் தொடர்ந்து மக்கள் விடுத்து வந்த கோரிக்கைகளால் படையினர் அங்கிருந்து அகன்று சென்றுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து படையினரின் பாவனையிலிருந்து சேதமாக்கப்பட்ட நிலையில் விடுவிக்கப்பட்ட இச் சனசமூக நிலையத்தை புனரமைத்து இயங்க வைக்க நடவடிக்கைகள் நிர்வாகத்தால் மேற்கொள்ளப்பட்டபோதும்இதற்கு படையினர் தடைவிதித்துள்ளதுடன் அக் கட்டடம் தமக்கு மீண்டும் தேவையெனத் தெரிவித்துள்ளனர். (33)

வடமராட்சிப் பகுதியில்

## நீலப்படம் காண்பித்த மினி திரையரங்கு மூடப்பட்டது

வடமராட்சியின் உடுப்பிட்டிப் பகுதியில் "நீலப்படம்" காண்பித்ததாகக் கூறப்படும் மினி திரையரங்கொன்று கலாசாரத்தைப் பேணும் இளைஞர் குழுவினால் மூடப்பட்டுள்ளது.

மினி திரையரங்க உரிமையாளரும், படக்காட்சியைப் பார்வையிட்டோரும் கடுமையாக எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பாக மேலும் தெரியவருகையில் குறித்த மினி திரையரங்கில் கடந்த சில தினங்களாக இவ்வாறான கலாசாரத்தைச் சீரழிக்கும் வகையிலான படங்கள் காண்பிக்கப்படுவதாகக் கலாசாரத்தைப் பேணும் இளைஞர் குழுவிற்கு முறைப்பாடுகள் செய்யப்பட்டிருந்தது.

இதையடுத்து கடந்த ஞாயிறு பிற்பகல் மினி திரையரங்கில் காட்சியின் போது திடீர் சோதனை ஒன்று நடாத்தப்பட்டுள்ளது. அவ்வேளையிலேயே ஒளிபரப்பப்பட்டுக் கொண்டிருந்த நாடாக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

இதனிடையே குறித்த படத்தை பார்வையிட்டுக் கொண்டிருந்த சுமார் 70 இற்கு அதிகமானோர்" எச்சரித்து விடுவித்த கலாசாரத்தைப் பேணும் இளைஞர் குழுவினர், திரையரங்கை மறு அறிவித்தல்வரை மூடியுள்ளனர். (27)

## யாழ் பல்கலை மாணவர்கள் சென்னை பல்கலையில்கற்கவசதி

யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் சென்னை பல்கலைக்கழகத்திற்குச் சென்று கற்றல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கும், ஆய்வுகளை மேற்கொள்வதற்குரிய வாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவுள்ளன.

இதற்காக இரு பல்கலைக் கழகங்களிடையேயும் ஒப்பந்தம் ஒன்று செய்து கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (33)

## பெருமளவு வெடிபொருட்கள் மீட்பு

(தென்மராட்சி)

சாவகச்சேரி நகரத்தில் அமைந்துள்ள டிறிபேக் கல்லூரி கிணற்றில் இருந்து பெரும் தொகையான வெடிபொருட்கள் மீட்கப்பட்டிருக்கிறது.

கிணற்றை பயன்படுத்துவதற்கு இறைக்கும்பொழுது கிணற்றுக்குள் வெடிபொருட்கள் உள்ளதை அவதானித்த பள்ளி நிர்வாகம் இது குறித்த வெடிபொருட்கள் அகற்றும் கலோரெஸ் நிறுவனத்திற்கு உடனடியாகத்தகவல்தெரிவித்துகிணற்றை துப்புரவு செய்த பொழுது மேற்படி நிறுவனத்தால் கிணற்றில் இருந்து கைக்குண்டுகள் 45, பொறிவெடிகளிற்கு பயன்படும் கம்பிகள் 200, பாலாணி இரண்டு உரபாக் என்பன இப் பாடசாலை கிணற்றில் இருந்து மீட்கப்பட்டது.


கடந்த காலத்தில் இப் பாடசாலை சிறிலங்காப் படைகளால் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (28)


## பருத்தித்துறை இந்துமகளிர் கல்லூரியில் தே.எ.பேரவை பேராளர் மாநாடு

யாழ்.மாவட்டத் தேசிய எழுச்சிப் பேரவையின் பேராளர் மாநாடு ஒன்று நாளை மறுதினம் முற்பகல் 10.00 மணியளவில் பருத்தித்துறை இந்து மகளிர் கல்லூரியில் இடம் பெறவுள்ளது..'யாழ்.மாவட்டத் தேசிய எழுச்சிப் பேரவைச் செயலாளர் சூ.சிறில் தலைமையில் இடம் பெறவுள்ள இம் மாநாட்டில் யாழ்.மாவட்டத்தில் உள்ள தேசிய எழுச்சிப் பேரவைப் பேராளர்களும், விடுதலைப்புலிகளின் உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள் ளனர்.இதன் போது யாழ்.மாவட்ட மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், தற்போதய அரசியல் நிலைமைகள், இராணுவ நெருக்கடிகள் என்பன குறித்து ஆராயப்படும். (33)

## ஆனையிறவு உப்பு உற்பத்திப் பேட்டை திறப்பு நிகழ்வில்...







# லஞ்சம் கொடுத்துப் பெரும்பான்மையை நிரூபிப்பதை விட அரசுடன் இணைந்து செயற்படும் கட்சிகளைப் பெறுவது நல்லது!

லங்காதீப சிங்கள நாளிதழில் பேராசிரியர் நலின் சுவாரிஸ்
மொழியாக்கம் அ.சக்திவேல்

கடந்த மாகாணசபைத் தேர்தலின் பின் மக்களில் அநேகமானோர்கள் இத்தேர்தலை நிராகரித்துள்ளார்கள் என்பது புள்ளி விபரங்களின் மூலம் தெரியவருகிறது. 55 சதவீதமானவர்கள் இம்மாகாணசபைத் தேர்தலில் வாக்களிக்கவில்லை. மாகாணசபைத் தேர்தல் சம்பந்தமாக மக்கள் ஆர்வம் காட்டியது மிகக் குறைவாகவே இருந்தது. மாகாண சபைத் தேர்தலை அநேகர் நிராகரித்துள்ளனர். இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்து 55 வருடங்கள் கடந்த நிலையில் மக்களின் சுகாதார வாழ்வு இலங்கையில் மிகவும் சீர்குலைந்துள்ளது.

இந்தப்பின்னணியில் அரசியல்வாதிகள் சம்பந்தமாக மக்கள் மனதில் நல்ல அபிப்பிராயம் ஏற்படவில்லை. இது மக்கள் மனதில் ஏற்பட்டுள்ள பெரும் தாக்கமாக உள்ளது. இதன் எதிரொலியாக தான் இம்முறை அதிகமானவர்கள் மாகாணசபைத் தேர்தல்களை நிராகரித் துள்ளனர்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் பொதுத்தேர்தலில் எப்படி மக்களைக் கவர்ந்து தேர்தல் பிரச்சாரங்களை மேற்கொண்டார்களோ அதே பாணியை மாகாண சபைத் தேர்தலிலும் கையாண்டார்கள், ஐக்கிய தேசிய முன்னணியின் சமாதான நடவடிக்கை மற்றும் அவர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்த பொருளாதார நடவடிக்கைகள் இவை இரண்டும் மக்களால் நிராகரிக்கப்பட்டுள்ளதென்பதை கடந்த பொதுத்தேர்தல்கள் மூலம் ஐக்கிய சுதந்திர மக்கள் முன்னணியினர் நன்கு அறிந்துள்ளனர்.

இரண்டாவது தடவையும் மாகாண சபைத் தேர்தலில் இதேமுறையை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினர் கையாண்டனர். இதில் வெற்றியும் கண்டனர். அத்துடன் ஐக்கிய தேசியக்கட்சி வாக்காளர்கள் வாக்குச் சாவடிகளுக்கு வாக்களிக்க வருவதற்கான யுக்திகளைக் கையாளவில்லை. இதனால் 55 சதவீதமான ஐக்கியதேசியக் கட்சி ஆதர வாளர்கள் வாக்கெடுப்பில் கலந்துகொள்ள வில்லை. இவர்கள் வாக்குச் சாவடிகளுக்கு வந்து வாக்களித்திருந்தால் தேர்தல் பெறு பேறுகள் வேறுவிதமாக மாறியிருக்கும். ஐக்கியதேசியக் கட்சியினர் எதற்காக வாக்களிப்பில் கலந்து கொள்ளவில்லை? இது ஒரு பிரச்சினைக்குரிய கேள்வியாகும் இதற்கு ஐக்கிய தேசிய அரசியல் உயர் பீடம் வகை சொல்லி ஆகவேண்டும்.

ஆறு மாகாணசபைத் தேர்தலிலும் மக்கள் தெளிவான ஆணையை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணிக்கு வழங்கி உள்ளனர்.குறுகிய அரசியல் நோக்கங்களை உதறித்தள்ளி புது யுகத்தை கட்டி எழுப்புவதற்கே மக்கள் இத்தீர்மானத்தை வழங்கியுள்ளனர். நாட்டில் அமைதியையும், பொருளாதார அபிவிருத்தியையும் விருத்தி அடையச்செய்ய வேண்டுமானால் வடக்கில் இயங்கும் அரசியலையும் இதில் இணைத்து கொள்ள வேண்டும்.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சியைக் கைப்பற்றிய பின் அவர்களுக்கு பாராளுமன்றத்தில் பெரும்பான்மைப் பலம் இருக்கவில்லை. ஆகவே இம்முறை மாகாணசபைத் தேர்தலின் பின் தாங்கள் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிக்கப் போவதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கூறியுள்ளது. ஆனால் தனது பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு கடும் முயற்சிகளைப் பாராளுமன்றத்தில் எடுக்க வேண்டிய நிலையில் உள்ளது. பொருளாதாரத்தை வெற்றிகரமாக முன்னெடுத்து செல்வது சமாதானப் பேச்சுவார்த்தைகள் போன்றவற்றை அரசாங்கம் மிகவும் அவதானமாக மேற்கொள்வது அவசியம்.

சமாதான முன்னெடுப்பின் பொழுது வடகிழக்கு பாராளுமன்ற உறுப்பினர்களின் அனுசரணை தேவை இதனைத் தற்போதைய அரசாங்கம் நிச்சயமாக பெற்றுக் கொள்ள வேண்டும். சிறிலங்கா ஒரு தீபகற்பம் இந்தத் தீபகற்பத்தில் எமக்கிடை யில் ஒற்றுமை இருக்கவேண்டும். வேற் றுமை இருக்கக்கூடாது. உலகில் எல்லா நாடுகளும் ஒன்றோடு ஒன்று தொடர்புகள் வைத்துள்ளன. இந்த நாட்டின் உள்விவகாரங்கள் எப்படியிருந்தாலும். சர்வதேசம் மிக உன்னிப்பாக இப்பிரச்சினையை அவதானித்த வண்ணமுள்ளது. வடகிழக்கு



அரசியல் உடன்பாடு இல்லாமல் இப்பிரச்சினையைத் தீர்ப்பது மிகவும் கடினம். விடுதலைப்புலிகளின் உதவிகள் இல்லாமல் இப்பிரச்சினையைத் தீர்ப்பது மிகவும் கடினம். உதாரணமாக நாம் அயல் நாடான இந்தியாவை எடுத்துக் கொண்டால் பஞ்சாப் மாநிலத்தில் முன்னைய பொலிஸ்மா அதிபர் கே.ஜி.எஸ்.ஹில். ஒரு சீக்கிய இனத்தைச் சேர்ந்தவர், ஆனால் அவர் பிரிவினைக்காகப் போராடிய சீக்கிய இனத்தவர்களின் சார்பாக அவர் அங்கு செல்லவில்லை. அவர் ஒரு இந்தியன் என்ற முறையில் பஞ்சாப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தார். இந்தியா ஒரு சமஷ்டி முறையை கையாளும் சனநாயகநாடு. அங்கு பிரிவினைக்கு இடம் கிடையாது. இந்தியாவின் ஆளும் கட்சித் தலைவி ஒரு இத்தாலிய பெண்மணியாவார். சனாதிபதி ஒரு முஸ்லிம், பிரதமர் சீக்கிய இனத்தைச் சேர்ந்தவர் இவர்கள் நாட்டை ஆட்சி செய்யவில்லையா? எனவே இலங்கை போன்ற சிறிய நாட்டில் ஏன் நாங்கள் சாதிமத பேதமின்றி ஒற்றுமையாக செயற்பட முடியாது?

தேசியப் பற்று இல்லாத காரணத்தால் இந்த நாடு தற்பொழுது சீரழிந்துள்ள நிலையில் உள்ளது. வடகிழக்குப் பிரச்சினைகளை வெகு இலகுவாக தீர்த்துக்கொள்ள முடியும். ஆனால் எமது சிங்கள அரசியல் வாதிகளிடம் குறுகிய நோக்கமும் தான் என்ற அகம்பாவமும் இருக்கின்றபடியால் இந்த நாட்டின் இனப்பிரச்சினை விஸ்வரூபம் எடுத்து சர்வதேச மட்டம் வரை சென்றுள்ளது. நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்திசெய்ய வேண்டுமானால் சமாதானப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்து யுத்தத்திற்கு ஒரு நிரந்தர முடிவு காணவேண்டும். இப்பொழுது எல்லா அதிகாரங்களையும் அரசாங்கம் தம்வசம் வைத்திருக்கின்றமையால் இப்பிரச்சினைக்கு சுமுகமான முடிவுகாணமுடியும். அதேபோல் சிறுபான்மை அரசியல் கட்சியினர்களின் ஆதரவையும் வெகு இலகுவாகப்பெற்றுக் கொள்ளமுடியும்.

விடுதலைப்புலிகளுடன் ஏற்படுத்திக் கொள்ளப்போகும் நல்லுறவுடன் பாராளுமன்றத்தில் சிறுபான்மை அரசியல் கட்சிகளுக்குநல்லுறவுகளை அரசாங்கம் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். சிறுபான்மை கட்சிகளுக்கு லஞ்சத்தை கொடுத்து அல்லது அமைச்சுப் பதவிகளை கொடுத்து பெரும்பான்மைப் பலத்தை நிரூபிப்பதைவிட அரசாங்கத்துடன் இணைந்து செயற்படப் போகும் எதிர்க்கட்சியினரைத் தேர்ந்தெடுப்பதே சிறந்த வழியாகும். அப்பொழுது தான் அரசாங்கத்தை நீடித்து நடத்த முடியும்.

சிறுபான்மை மக்கள் இப்பொழுது அரசாங்கத்தை நம்பி இருக்கின்றனர். இது சிக்கலை ஏற்படுத்தாது. ஆனால் இவற்றை ஆயுதமாகப் பயன்படுத்துவதை அரசாங்கம் நிறுத்திக் கொள்ளவேண்டும். மக்கள் எதிர்க் கட்சியினரை பழிவாங்குவதற்கு அரசியல் அதிகாரத்தைக் கொடுக்கவில்லை. ஆகவே அரசாங்கம் எதிர்க் கட்சியினரைப் பழிவாங்குவதை மக்கள் அனுமதிக்க மாட்டார்கள். தென்பகுதி அரசியல்வாதிகள் சிறுபான்மையினரை பழிவாங்கத் தொடங்கியதால் விடுதலைப்புலிகளின் பலம் நாளுக்கு நாள் அதிகரித்தது. இதனால் அவர்கள் சர்வதேச சமூகத்தவர்களின் அனுதாபத்தைப் பெற்றுள்ளனர். சர்வதேச சமூகம் அவர்களை அங்கீகரித்துள்ளது.ஒரு சனநாயக நாட்டின் பிரஜைகளின் உரிமைகளைப் பாதுகாப்பது அரசாங்கத்தின் கடமையாகும். உலகிலுள்ள போராளிக் குழுக்கள் இந்தப்பொது உரிமைகளை இலக்கு வைத்து போராட்டங்களை மேற்கொண்டு வருகின்றன. உரிமைகளுக்காகப் போராடினால் அது பயங்கரவாதம் அல்ல. அது உரிமைப் போராட்டம்.

கொள்ளுப்பிட்டிக் குண்டு வெடிப்புடன் அரசாங்கத்தின் சமாதானப் பேச்சுவார்த்தைகள் முடிவடையும் எனநாட்டு மக்கள் எண்ணினார்கள். ஆனால் அரசாங்கம் அந்தக் குண்டு வெடிப்பால் சமாதானப் பேச்சுவார்த்தைகள் சீர்குலையாது என அறிக்கை விட்டிருக்கிறது. ஆனால் எதிர்க்கட்சியினரோ மீண்டும் நாடு ஒரு யுத்தத்தை எதிர்நோக்க வேண்டிவரும் என அறிக்கை விட்டிருந்தது.



இந்த இரண்டு கட்சிகளின் அபிப்பிராயங்களும் பிழையானவையாகும்.தமது குறுகிய அரசியல் இலாபங்களை நோக்கமாகக் கொண்டே இந்த அறிக்கை விடப்பட்டிருக்கின்றன.

அமெரிக்க உலக வர்த்தக மையம் குண்டு வைத்துத் தகர்க்கப்பட்ட வேளையில் அரசாங்கத்தின் மேல் பழியைச் சுமத்தி எதிர்க்கட்சி ஒதுங்கவில்லை. அரசாங்கத்துடன் இணைந்து. இந்தக் குண்டு வெடிப்பை கண்டித்தது. இவற்றைப் பார்க்கும் பொழுது எமது நாட்டு அரசாங்கம் கடைப்பிடித்த கொள்கைகள் உலக நாடுகளின் முன்பாக வெட்கித் தலைகுனிய வேண்டிய நிலையை ஏற்படுத்தியுள்ளது. ஏனென்றால் கொள்கைகள் அற்ற அரசியல் நடத்துகின்றமையால் இச்சம்பவம் உலக மக்களின் அனுதாபத்தைப் பெறவில்லை.

ஆயுதங்களை கீழே வைத்துப் பேச்சுவார்த்தைகளுக்கு வாருங்கள் என நிபந்தனை விதிக்கும் ஜே.வி.பி.யினர் கடந்த காலத்தில் தாங்கள் இந்த நாட்டில் செய்த அட்டூழியங்களை மறந்து விட்டனரா? இந்த நாட்டின் அழிவுக்கு ஜே.வி.பி.யினரும் பங்குதாரிகளாவார்கள். இவற்றை மக்கள் மறக்கவில்லை. அப்படிப்பட்ட கொள்கைகளையுடைய ஜே.வி.பி.யினருக்கு விடுதலைப் புலிகளை ஆயுதங்களை கீழே வைத்து பேச்சுவார்த்தைகளுக்கு வாருங்கள் என கூறுவதற்கு அருகதைகிடையாது. ஆனால் இப் பொழுது சுதந்திரக் கட்சிதான்நினைத்தபடி எதுவும் செய்ய முடியாது. ஜே.வி.பி சுதந்திரக் கட்சியையும், சனாதிபதியையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளது. இதை நான் வரவேற் கின்றேன். ஆனால் சமாதானப் பேச்சுவார்த் தைகள் சம்பந்தமாக அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் நடவடிக்கை சரியானதே. ஆகவே அரசாங்கம் உடன் நிகழ்ச்சி நிரலை தயாரிக்க வேண்டும்.

தற்பொழுது விடுதலைப்புலிகள் சமஷ்டி சுயாட்சி முறையை முன்வைத்து நிகழ்ச்சி நிரலைத் தயாரித்துள்ளனர். ஐந்து வருடங்களுக்கு சுயாட்சியை வழங்கவேண்டும் என்ற கோரிக்கையை அது முன்வைத்துள்ளது.

பலஸ்தீனத்திலும் இதே பிரச்சினையை முன்வைத்து சமஷ்டி முறையை வலியுறுத்தியுள்ளது. இந்தப் பிரச்சினையைப் பேச்சுவார்த்தைகளுக்கு எடுக்கவில்லை. இவற்றைத் தட்டிக்கழித்த வண்ணம் இருந்தார்கள். அகதிகள் மறுவாழ்வு புனருத்தாபனம் செய்தல் போன்றவைகளை முன்வைத்தமையால் பேச்சுவார்த்தைகள் முடிவடையாமல் தோல்விகண்டது.

எரிக்சூல்ஹெய்ம் நிகழ்ச்சி நிரல் தயாரிப்பதில் அரசாங்கம் மந்த நிலையை கடைப்பிடித்து வருகின்றது. பேச்சுவார்த்தைகள் வெற்றிபெற வேண்டுமானால் விடுதலைப்புலிகள்-அரசாங்கம் இருதரப்பும் ஒரு மித்தகருத்துடன் நிகழ்ச்சி நிரல் தயாரிக்க வேண்டும்.அது தவிர்த்து வெவ்வேறு நிகழ்ச்சி நிரல்களைத் தயாரிப்பதில் எந்தப் பிரயோசனமும் இல்லை. அரசும், விடுதலைப் புலிகளும் ஏற்றுக் கொள்ளும் விதத்தில் நிகழ்ச்சி நிரல் இருத்தல் அவசியம். இதை அரசாங்கம் நன்கு உணர்ந்து காலதாமதமின்றி நிகழ்ச்சி நிரலைத் தயாரித்து பேச்சுவார்த்தைகளுக்கு சமர்ப்பிக்கவேண்டும்.

தற்போதைய அரசு சமாதானப் பேச்சுவார்த்தைகளின் நிகழ்ச்சி நிரலை தயாரிக்கும் பொறுப்பை ஜயந்த தனபாலவிடம் ஒப்படைத்துள்ளது. இது நல்ல செயலாகும்.நோர்வே அரசுடன் சரிசமமாக வாதாடும் வல்லமை ஜயந்த தனபாலவிடம் உண்டு. ஆகவே சகலரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய ஒரு நிகழ்ச்சி நிரலைத் தயாரித்துப் பின் பேச்சுவார்த்தை நடத்துவது சிறந்த வழியாகும். சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்வைத்து அன்றாடம் வயிறு வளர்ப்பதை உடன் நிறுத்த வேண்டும். கடந்த காலத்தில் இப்படிப்பட்ட சம்பவங்கள் நடந்துள்ளன. இதே பிழையை எதிர்காலத்தில் ஏற்படுத்த வேண்டாம் என அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

# 21 ஆண்டுகளுக்கு முன் தமிழர் சந்தித்த அவலத்திற்கு சந்திரிகா இன்று கண்ணீர் சிந்துவது ஏன்?

முத்தயனூர் ப.துஸ்யந்தன்

"ஆடு நனைகிறது என்று ஓநாய் அழுகிறது" என்ற தமிழ்ப் பழமொழியை வைத்து ஒருபெரிய அரசியல் உதாரணம் சொல்வதானால் சந்திரிகாவின் தமிழினத்தின் மீதான அண்மைக்கால கரிசனைப்பேச்சைக் குறிப்பிடலாம். அதாவது 1983ஆம் ஆண்டு யூலைமாதம் நடைபெற்ற தமிழினத்தின் மீதான சிங்களப் பேரினவாதிகளின் இன வன்முறைக்கு சிறிலங்கா சனாதிபதி


சந்திரிகாவின் ஆட்சியில்....

சந்திரிகா வருத்தம் தெரிவித்திருப்பதுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்கும் ஒரு நிகழ்வையும் நிகழ்த்திக் காட்டியிருக்கிறார்.

சந்திரிகாவின் அரசியல் அராஜகத்தை அனுபவித்தவர்கள் என்ற வகையில் தமிழ் மக்கள் சந்திரிகாவின் இந்த கபட நாடகத்தை வேடிக்கையாகப் பார்ப்பார்கள் என்பது சந்திரிகாவிற்கும் தெரியும். அப்படியானால் சந்திரிகா 21ஆண்டுகளிற்கு முன் நடந்த இந்த வன்முறைக்கு இப்போது வருத்தம் தெரிவிப்பதன் உண்மைத்தன்மை தான் என்ன? இதன்மூலம் அவர் அடைய எத்தனிக்கும் அரசியல் லாபம்தான் என்ன என்பது பற்றி தெளிவாகப் பார்க்க வேண்டும்.

பிசுபிசுத்துப்போய்க் கொண்டிருக்கின்ற சமாதான முன்னெடுப்புக்களிற்கு மத்தியில் சர்வதேச பார்வையில் குற்றவாளியாகிக் கொண்டு வரும் சந்திரிகாவின் அரசியல் தலைமைக்கு சர்வதேசத்தை தன் சார்பு நிலைக்குக்கொண்டுவரவேண்டிய அவசிய நிலைதோன்றி இருக்கிறது. ஏனெனில் சர்வதேச நாடுகளின் நிதி உதவி இன்றி நாட்டைக்கட்டிக்காக்க முடியாது என்ற வங்குறோத்து நிலை பொருளாதாரத்தை சுமக்கின்ற சந்திரிகா அரசிற்கு சர்வதேச நாடுகளின் கருணைப் பார்வை என்பது அவசியமாகத் தேவைப்படுகிறது.

தமிழர் பிரச்சினை தொடர்பில் சாதகமான நிலைமையைக் கடைப்பிடிக்கின்ற வரையில் சர்வதேசத்தின் நிதிஉதவிகள் கிடைக்காது என்ற சர்வதேச நாடுகளின் நிலைப்பாட்டில் சந்திரிகா சர்வதேசத்தைத் தன்வசம் இழுப்பதற்காக இப்படியானதொரு மன்னிப்புக்கோரல் நாடகத்தை அரங்கேற்ற முன்வந்திருக்கலாம் எனும் கருத்துப் பலமாகவே உலாவுகின்றது.

உள்நாட்டில் தன் கூட்டுக்கட்சியான ஜே.வி.பி.யின் குரலுக்கு அடிபணிந்து அரசியல் நடத்தும் சந்திரிகா இனப் பிரச்சினை தொடர்பில் முடிவெடுக்கும் அதிகாரம் அற்று இருக்கின்ற நிலையில் சர்வதேசத்தின் சந்தேகப்பார்வையை இல்லாமல் செய்வதானால் சந்திரிகாவிற்குத் தென்பட்ட ஒரு வழியாகக்கூட இந்த அனுதாபம் தெரிவிக்கும் நாடகம் இருந்திருக்கலாம்.

1994ஆம் ஆண்டு தன்னை ஒரு சமாதானப் புறாவாகக் காட்டி அரசியல் உயர் நிலைப்பதவிகளைப்பெற்ற சந்திரிகா 1995ஆம் ஆண்டு தமிழீழ மக்களின் மனங்களில் மாறாத வடுவான "சூரியக்கதிர்" இராணுவ ஆக்கிரமிப்பை நிகழ்த்தி 5 இலட்சத்திற்கு மேற்பட்ட யாழ்குடா தமிழ் மக்களை அகதி என்ற அவல வாழ்விற்குத் தள்ளியதோடு ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழ்ப்பொதுமக்களைக்கொன்று புதைகுழியில் புதைத்தார்.அவரது ஆட்சிக்காலத்தில்தான் தமிழர் பகுதிகள் அனைத்திலும் மக்கள் அவலவாழ்வு வாழ்ந்தனர். தனது இராணுவ ஆக்கிரமிப்பு வெற்றியை தனது மாமனான அப்போதைய பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தையுடன் தங்கத்தட்டில் வைத்துப் பரி மாறி மகிழ்ந்து சிங்கள மக்கள் மத்தியில் தன்னை ஒரு விகாரமாதேவியாகக் காட்டிக்கொண்ட சந்திரிகா அம்மை யாருக்குத் தான் செய்த கொடுமைகளை மறந்துபோனதுதான் விந்தையாக உள்ளது. ஆனால் இதனைத் தமிழ் மக்கள் மறந்திருக்கமாட்டார்கள்.


ஆராய்வு

இப்போதைக்கு சந்திரிகாவிற்குத் தேவைப்படுவது தனது ஆட்சி நிலைக்கவேண்டும் என்பதுதான். அதற்காக அவர் என்ன வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருக்கிறார் என்பது புரிகிறது.

கருணா குழுவை அரவணைத்து புலிகள் மீதான நிழல் யுத்தம் ஒன்றை நடத்திவரும் சிறிலங்காப் படைத்துறையினரின் செயற்பாட்டால் சமாதான முயற்சிகள் பாதிக்கப்படும் நிலைதோன்றி இருக்கும்.

இவ் வேளையில் கருணாவுக்கும் தமக்கும் எவ்விதத் தொடர்புகளும் இல்லை என மறுத்து வரும் இராணுவ உயர் மட்டங்களின் பொய்ப்பரப்புரைகள் வெளிச்சத்திற்கு வரத்தொடங்கியுள்ளன.

மட்டக்களப்பு சிறைச்சாலையில் சிறைக்கைதியாக இருந்த கருணா தரப்பை சார்ந்த "சச்சி மாஸ்டர்" என்பவரை கருணாவின் பேச்சாளராகப் பாவித்து மாறன் என்ற பெயரில் இயக்கிவந்த சிறிலங்கா புலனாய்வுத்துறையின் செயற்பாடு அம்பலத்திற்கு வந்தது. விடுதலைப்புலிகள் இது தொடர்பாக தமது கண்டனத்தைத் தெரிவித்தபோது "சச்சி மாஸ்டர்வேறு" "மாறன் என்பவர் வேறு" எனும் தோற்றப்பாட்டை உருவாக்கிய சிறிலங்கா படைத்துறை புலனாய்வுப் பிரிவிற்கு விழுந்தது அடி.

இரண்டாவதாக கடந்த 27.05.2004 அன்று கொழும்புப் பகுதியில் கருணா குழுவிற்கு இடையில் ஏற்பட்ட பிளவு காரணமாக கருணா குழு உறுப்பினர்கள் 7 பேர் சகஉறுப்பினர்களால் சுட்டுக் கொல்லப்பட்டதுடன் சிறிலங்காப் புலனாய்வுத் துறையைச் சேர்ந்த தம்மிக்க என்பவரும் ஸ்தலத்தில் சுட்டுக்கொல்லப்பட்டிருப்பதாக வந்த செய்தியில் இருந்து கருணா குழுவிற்கும் சிறிலங்காப் படைத்துறை புலனாய்வுப் பிரிவிற்கும் இடையிலான தொடர்பு வெளிச்சத்திற்கு வந்திருக்கிறது.

இப்படிப்பட்ட அபாயகரமான சூழ்நிலையை ஏற்படுத்தி இருக்கும் சந்திரிகா தலைமையிலான அரசு சமாதான முயற்சிகளிற்கு பாரதூரமான முட்டுக்கட்டைகளைப் போட்டு வருகிறது என்பது சர்வதேசத்திற்கு வெளிச்சமாகிக் கொண்டு வருகின்ற இவ் வேளையில் எதிர்காலத்தில் சர்வதேச நாடுகளின் சமாதானம் தொடர்பான முன்னெடுப்புக்கள் எப்படி அமையப் போகிறது என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

---

## வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்துவதாகக் கூறிய அரசு பெற்றோல் விலையை 16 வீதத்தால் அதிகரித்துள்ளது

### ஐக்கிய தேசியக் கட்சி கண்டனம்

(கொழும்பு)

வரலாற்றில் என்றுமில்லாதவாறு பெற்றோலின் விலையினை அரசாங்கம் அதிகரித்துள்ளமை நடுத்தர மற்றும் சாதாரணதர மக்களுக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.இதுவரை இரண்டு அல்லது மூன்று வீதத்தால் மட்டுமே எண்ணெய் விலைகள் அதிகரித்திருந்தன. இம்முறை 16 சதவீதத்தினால பெற்றோலின் விலை அதிகரிக்கப்பட்டுள்ளது என்று ஐக்கிய தேசியச் கட்சி தெரிவித்துள்ளது.

அரசாங்கம் பெற்றோலின் விலையினை அதிகரித்துள்ளமையினால் உயர்தர வர்க்கத்தினருக்கு பாதிப்பு குறைவாகும். சாதாரண மற்றும் நடுத்தர வர்க்கத்தினருக்கே பெரும் பாதிப்பாகும். பெற்றோலின் விலை அதிகரிப்பினால் பொருட்களின் விலைகளும் அதிகரிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. என்று முன்னாள் அமைச்சரும் எம்பியுமான பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நேற்று முன்தினம் பிற்பகல் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கருத்து தெரித்த அவர்,பெற்றோல் விலை ஏற்றத்தினால் நாட்டிலுள்ள 15 இலட்சம் வாகன உரிமையாளர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். அரசாங்கம் வேண்டுமானால் பெற்றோல் விலையினை குறைக்க முடியும் என்று கூறியுள்ளார்.

அரசாங்கம் ஒரு லீற்றர் பொற்றோலுக்கு 20ரூபாவை விசேட வரியாக அறவிடுகின்றது. பெற்றோலின் விலையினை குறைப்பதனால் அரசாங்கம் இந்த வரியை அறவிடாது விடமுடியும். இதன் மூலம் ஒரு லீற்றர் பெற்றோலை 45 ரூபாவுக்கு வழங்க முடியும். இவ்வாறு அரசாங்கம் செய்வதால் அரசின் வருமானம் குறையும். விலைவாசியைக் குறைப்போம் என்று கூறி ஆட்சிக்கு வந்த அரசாங்கம் இன்று பெற்றோலின் விலையினை அதிகரித்துள்ளது.

டீசல், மண்ணெண்ணையின் விலையும் அதிகரிக்கவுள்ளது. அரசாங்கம் பொருளாதார விடயம் தொடர்பில் மக்களுக்கு உண்மைக்கும் புறம்பாக கருத்துக்களைக் கூறி வருகின்றது. எரிபொருள் விலையினைக் கட்டுப்படுத்துவதற்கு இந்தியா நிதி வழங்கியுள்ளதாக அரசாங்க ஊடகங்கள் தெரிவிக்கின்றன. அப்படியானால் அந்த நிதி எங்கே?

பதவி ஏற்று மூன்று மாத காலத்திற்குள் வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்துவதாக தெரிவித்த அரசாங்கம் இன்று வாழ்க்கைச் செலவை அதிகரித்து வருகின்றது என்று கூறியுள்ளார்.

## புகையிரத சில்லில் சிக்கிய மாணவன் பரிதாப மரணம்

(கொழும்பு)

அளுத்கமையிலிருந்து மருதானை நோக்கி சென்று கொண்டிருந்த புகையிரதத்தின் மிதிபலகையில் நின்று கொண்டு பிரயாணம் செய்த பாடசாலை மாணவன் அந்த புகையிரதசில்லில் கால் சிக்குண்டதால் அவ்விடத்திலேயே பலியாகியுள்ள சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மக்கொனை புகையிரத நிலையத்துக்கருகில் இடம்பெற்றுள்ளது.

பாணந்துறை ஹேனமுல்ல ஜீலான் மத்திய கல்லூரியில் உயர்தரவகுப்பில் கல்வி பயின்று வந்த எம்.வை.எம். ஸியான் எனும் 17வயது மாணவனே இவ்வாறு பலியானவர்.

ஞாயிற்றுக்கிழமை பேருவளை கொச்சிமலைக் கந்தூரி வைபவத்தில் கலந்து கொண்டபின்னர் சக நண்பர்களுடன் பாணந்துறை நோக்கி, புகையிரதத்தில் வரும் போதே இந்தச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

## சமாதானப் பேச்சுக்களில் முஸ்லிம்களின் யோசனைகள் குறித்து ஆராய்வது முக்கியம்

### –நோர்வே பிரதிநிதிகளுடனான சந்திப்பின் பின் ஹக்கீம்

சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்கும் நிகழ்ச்சி நிரலில் முஸ்லிம் மக்கள் சார்பாக சமர்ப்பிக்கப்பட்ட யோசனைகள் தொடர்பாக கலந்துரையாடுவது மிக முக்கியமானது எனச் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நேற்றுக் காலை நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கேசனை சந்தித்த பின்னரே அவர் இதனைத் தெரிவித்தார் நேற்றுக் காலை ரவூப் ஹக்கீமின் இல்லத்தில் இச் சந்திப்பு இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

## சுட்டுக்கொலை

(கொழும்பு)

உந்துருளியில் சென்று கொண்டிருந்தவர் இனந்தெரியாத நபரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் 26ஆம் திகதி சிறிலங்காவின் பெல்லன்விலவில் இடம் பெற்றுள்ளது. மகரகமவைச் சேர்ந்த இந்நபர் தனது மோட்டார் சைக்கிளில் பெல்லன்விலரஜமகாவிகாரைக்கு அண்மையில் சென்று கொண்டிருந்த போது மறைந்து நின்ற கொலையாளியால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாகப் பொலிசார் கூறியுள்ளனர்.

# ஊடகவியலாளர் தகவல் பெறும் வட்டாரங்கள் குறித்து விசாரிக்க முடியாது

### –சுதந்திர ஊடக அமைப்பு பேச்சாளர் தெரிவிப்பு

ஊடகவியலாளர்கள் தகவல் களைப் பெற்றுக்கொள்ளும் வட்டாரங்கள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு பொலிசாருக்கு எந்தவிதமான அதிகாரங்களும் கிடையாது. ஊடகவியலாளர்களின் தகவல் வட்டாரங்கள் தொடர்பாக விசாரணை செய்யப்படுமாயின் அது அடிப்படை உரிமை மீறலாகும் என்று சுதந்திர ஊடக அமைப்பின் பேச்சாளர் சுனந்த தேசப்பிரிய சிறிலங்கா பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அண்மையில் கொழும்பில் இடம்பெற்ற சம்பவம் ஒன்று குறித்து தமிழ்நெற்இணையத்தளம் வெளியிட்டுள்ள செய்தி தொடர்பாக அதன் ஆசிரியர் சிவராமை பொலிஸ் விசாரணை செய்யப் போவதாக பொதுப் பாதுகாப்பு சட்டம் ஒழுங்குகளுக்கான அமைச்சின் திலக் ரணவிராஜ தெரிவித்திருந்தார். ஊடகவியலாளர்களின் கருத்து சுதந்திரப் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் பொலிஸ்மா அதிபர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் சுதந்திர ஊடக அமைப்பு பொலிஸ்மா அதிபருக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளது.


## தமிழீழப் போக்குவரவுக் கழகம்

### தொழில் நுட்பவியலாளர் (வாகனமெக்கானிக்)

## பயிலுநர் தேவை

பின்வரும் தகைமையுடைய ஆண்பாலோர் நேரில் விண்ணப்பங்களுடன் வருகைதருமாறு வேண்டுகின்றோம்.

**தகைமைகள் :-**

1. கல்வித்தகைமை :- ஆண்டு 08
2. அகவை :- 18தொடக்கம் 23வரை

**குறிப்பு:-**

04.08.2004 ஆம் நாள் விசுவமடு றெட்பானா ஒளிநிலா திரையரங்கிற்கு அருகாமையிலுள்ள தமிழீழப் போக்கு வரவுக் கழகம் நடுவப்பணிமனைக்கு வருகை தரவும்.

2. பயிற்சிக் காலத்தில் சம்பளம் வழங்கப்படும்
3. உறுதிப்படுத்தும் சான்றுகளுடன் வருக.

முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப்பகுதி,
தமிழீழப்போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை,
விசுவமடு.

((சி.9761)



## 09ஆம் ஆண்டு நினைவலைகள்



| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 27 - 07 - 1964 | 29 - 07 - 1995 |

## கப்டன் நிசா/வளர்மதி

### (கனகரத்தினம் ஜமுனா)

கருவாக்கேணி பாடசாலை வீதி வாழைச்சேனை

09ஆம் ஆண்டுநினைவுகளைத்தாங்கி விடுதலைப்பயணத்தை விரைவாக்குவோம்.

கனகபுரம்,
கிளிநொச்சி. (4851) அன்புச்சோலை மூதாளர் பேணலகம்


# ஐ.தே.க.வோ புலிகளோ ஆட்சியைக் கவிழ்க்க அனுமதியோம்

### ஜாதிக ஹெல உறுமய கூறுகிறது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப்புலிகளோ அல்லது ஐக்கியதேசியக் கட்சியோ ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு ஜாதிக ஹெல உறுமய ஒரு போதும் அனுமதிக் காது என ஜாதிக ஹெல உறும யவின் கண்டி மாவட்டப் பாராளு மன்ற உறுப்பினரான உடவத்தே நந்ததேரர் தெரிவித்துள்ளார். அவர் மேலும்தெரிவிக்கையில்

"விடுதலைப்புலிகளோ அல் லது ஐக்கிய தேசியக் கட்சியோ அரசாங்கத்தை கவிழ்க்கும்வரை ஜாதிகஹெல உறுமய காத்திருந் தால் அக்கட்சி தனது நிலையைத் திரும்ப அடைய முடியாது.

அவ்வாறு ஏதாவது நடந்தால் பாராளுமன்றத்தில் கட்சியின் பிரதிநிதித்துவம் முழுவதும் பயனற்றதாகிவிடும்" எனக் கூறி யுள்ளதுடன் "நாட்டையும் மதத்தை யும் பாதுகாப்பதே "எமது பிரதான நோக்கம் அதற்காகவே நாம் அர சாங்கத்திற்கு ஆதரவு வழங்கு கிறோம் இந்த நோக்கத்திற்காக எமது உயிர்களைக் கூடத் தியாகம் செய்யத்தயங்க மாட்டோம்" என வும் நந்ததேரர் சூளுரைத்துள்ளார் என ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இதேவேளை எதிர்க்கட்சி அரசாங்கத்தைக் கவிழ்ப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டாது என சிறி லங்காவின் மகாவலி அபிவிருத்தி அமைச்சர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தொழில் வல்லுநர் சங்கத்தின் வரு டாந்தப் பொதுக்கூட்டத்தில் உரை யாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரை யாற்றுகையில;

"எதிர்க்கட்சி பொய்யான கூற் றுக்களை வெளியிட்டு பொது மக் களைத் தவறான வழிக்கு இட்டுச் செல்கின்றது" எனவும் கூறி யுள்ளார்.


## வரலாறு காணாத மலிவு விற்பனை

**கொழும்பு ஜெயா புக் சென்ரரின்** அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தினால் பல்கலைக்கழகத்தில் இரண்டாவது தடவையாக வரலாறு காணாத மலிவு விற்பனை நடைபெறவுள்ளது.

| | |
| --- | --- |
| காலம்:- | 2004 ஜூலை 19 முதல் 29 வரை |
| நேரம்:- | தினமும் காலை 9.00 மணிமுதல் 6.00 மணிவரை (புதிய நேரம்) |
| இடம்:- | யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரை மண்டபம். |

❋சகலருக்கும் இலங்கை நூல்களிற்கு 10% கழிவு வழங்கப்படும்.
❋பிறநாட்டு வெளியீடுகளுக்கு 15% கழிவு வழங்கப்படும்.
❋மொத்தமாகக் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் இலங்கை வெளியீடுகள் தவிர பிறநாட்டு வெளியீடுகள் (ஒவ்வொன்றிலும் ஆகக்குறைந்தது 10 பிரதிகள்) கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவாக 20% வழங்கப்படும்.

பாடசாலைகள், பல்கலைக்கழகம், தொழில்நுட்பக் கல்லூரிகள், கல்வியியற் கல்லூரி, பொது நிறுவனங்கள், பிரதேசசபை நூலகங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் ஆகிய நிறுவனங்களிற்குக் கடன் அடிப்படையில் புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்குரிய ஒழுங்குகள் செய்து தரப்படும்.

தொடர்புகளுக்கு:-
வணிக மாணவர் மன்றம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

(சி-10116)



## தமிழீழப் போக்குவரவுக் கழகம்

## நடத்துநர் பணிக்கான விண்ணப்பம் கோரல்

பின்வரும் தகைமையுடைய ஆண்பாலோர் நடத்துநர் பணிக்கான விண்ணப்பங்களை அனுப்புமாறு வேண்டுகின்றோம்.

**தகைமைகள்:-**

01. கல்வித்தகைமை :- க.பொ.த.(சாதாரணம்) கற்றிருத்தல்
02. அகவை :- 20 தொடக்கம் 35 வரை
03. உயரம் :- 05 அடி 05 அங்குலம்

**குறிப்பு:-**

01. விண்ணப்ப முடிவு நாள் :- 06.08.2004
02. சம்பளம் :- நிதித்துறை சம்பளத்திட்டம் படி
03. விண்ணப்பதாரருக்கான நேர்முகத் தேர்வு :- 09.08.2004 ஆம் நாள் பாண்டியன் வாணிபம் கிளிநொச்சி கரடிப்போக்கு பணிமனையில் நடைபெறும்
04. நேர்முகத் தேர்வுக்கு வருகை தருவோர் தங்கள் கல்வித்தகைமை, அகவை என்பவற்றை உறுதிப்படுத்தும் சான்றுகளோடு வருக.
05. விண்ணப்பப் படிவங்களை முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பு, மல்லாவி, கிளிநொச்சி, வெள்ளாங்குளம், முகமாலை ஆகிய இடங்களில் உள்ள நேரப்பணிப்பாளர் அலுவலகங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

*விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி-*
முகாமையாளர்,
ஆளணி ஆளுகைப் பகுதி,
தமிழீழப்போக்குவரவுக் கழகம்,
நடுவப்பணிமனை, விசுவமடு.

(சி-9762)

# மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சு
# வடக்கு கிழக்கு மாகாண சபை

## போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத்திட்டம் (கார்ப்)

ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதிப்படுத்தப்பட்டது
"ஆஅவ" கடன் இல.2043 -SRI (SF)

# கேள்வி அறிவித்தல் இல:31

## குடிசார் வேலைகளைப் பெறுதல்

01. போரினால் பாதிக்கப்பட்ட பிரதேச புனரமைப்புத் திட்டத்தின் (கார்ப்) ஆகு செலவு சார்பாக பலதரப்பட்ட நாணயங்களில் ஆசிய அபிவிருத்தி வங்கியிட மிருந்து (ADB) கடனொன்றை இலங்கை அரசாங்கம் பெற்றுள்ளதுடன் கீழேயுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள குடிசார் வேலைகளுக்கான ஒப்பந்தங்களின் கீழ் தகுதிவாய்ந்த கொடுப்பனவுகளுக்கு இக்கடனின் வரும்படிகளின் ஒரு பகுதி பிரயோகிக்கப்பட உத்தேசிக்கப்பட்டுள்ளது.

02. தன் பின்னகத்துத் தொழில்தருணராகக் குறிப்பிடப்படும் NECORD கருத்திட்டப் பணிப்பாளர் சார்பாக கேள்விச் சபையின் தலைவரால் பின்வரும் வேலைகளுக்குத் தகுதிவாய்ந்த ஒப்பந்தகாரரிடமிருந்து பொறிவைக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| இல | ஒப்பந்த இனங்காட்டல் இல | ஒப்பந்தத்தின் பெயர் | ஆகக்குறைந்த இக்ராட் பதிவு | கூறுவிலைப் பிணைப்பணம் (ரூபா) |
|---|---|---|---|---|
| | MN/CAARP/HS/03 | மன்னார், முருங்கன் மாவட்ட வைத்தியசாலையில் வெளி நோயாளர் சிகிச்சைப் பிரிவு நிர்மாணம். | M5 கட்டடங்கள் | 141,000/= |
| | VA/CAARP/HS/01 | வவுனியா ஆயுர்வேத வைத்தியசாலையில் வெளி நோயார் சிகிச்சைப் பிரிவு, மருந்தகம் மற்றும் சமையலறை நிர்மாணம். | M5 கட்டடங்கள் | 145,000/= |

03. பின்வரும் தகுதிகளைக் கொண்டுள்ளதாக விளங்கும் உறுதியான நோக்கமுடைய சகல ஒப்பந்தகாரர்களுக்கும் கூறுவிலையிடல் திறந்துள்ளது.

I. நிர்மாணப்பயிற்சி, அபிவிருத்தி நிறுவனத்தினால் (ICTAD) விருத்தி செய்யப்பட்ட தேசிய நிருமாண ஒப்பந்தக்காரர் பதிவு, தரப்படுத்தல் திட்டத்தின் கீழ் மேற்படி அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட தரமொன்றில் ஒப்பந்தகாரர் பதிவுசெய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. இலங்கை தேசிய நிர்மாண ஒப்பந்தகாரர் சங்கத்தின் (NCCASL) உறுப்பினராக (ICATAD மேற்படி M7 க்கு மேல் பதிவு செய்தவர்களுக்கு மட்டும்) விளங்க வேண்டும்.

III. கடந்த ஐந்து வருடங்களில் ஆகக்குறைந்தது ஒத்ததன்மையிலான இரு ஒப்பந்தங்களைத் திருப்திகரமாக முடித்ததுடன், கடந்த ஐந்து வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட வேலையில் திருப்திகரமான சாதனையைக் கொண்டிருத்தல் வேண்டும். இது வாடிக்கையாளர்களிடமிருந்து அத்துடன் அல்லது உசாவலர்களிடமிருந்து பெறப்பட்ட சான்றுப்பத்திரங்களின் மூலம் உறுதிப்படுத்தப்படவேண்டும். இக்காலத்தின்போது மேற்கொள்ளப்பட்ட சகல வேலைகளினதும் முழு நிரலொன்று வழங்கப்படல் வேண்டும்.

IV. "ICTAD" வழிகாட்டல் முறைகளின் பிரகாரம் கணக்கிடப்பட்டவாறு வேலையைப் பொறுப்பேற்றவர் போதியளவு ஒப்பந்த ஆற்றலளவைக் கொண்டிருக்க வேண்டும்.

V. மோசடியான, அல்லது வஞ்சனையான நடவடிக்கைகளுக்கு அல்லது திருப்திகரமற்ற வேலைச் செயற்றிறனுக்கு தகுதியற்றவர் என்ற பிரகடனத்தின் கீழ் விளங்கக்கூடாது.

VI. ஒப்பந்த ஆவணங்கள் வழங்கப்படுவதற்கு முன் ஒப்பந்தக்காரரின் புதுப்பிக்கப்பட்ட பதிவுப் புத்தகத்தை சமர்ப்பிக்கக்கூடியவராக இருக்கவேண்டும்.

04. ஏதாவது ஒப்பந்தக்காரருக்கு அனுமதிக்கப்படும் ஆகக் கூடுதலான ஒப்பந்தங்களின் எண்ணிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் NECORD வேலை அடங்கலாக மூன்றுக்கு மேற்படலாகாது.

05. தகுதிவாய்ந்த கேள்விகோருவோர் மேலும் தகவலை கருத்திட்டப் பணிப்பாளர் அலுவலகம், NECORD, 140, மின்சாரநிலைய வீதி, திருகோணமலையில் பெற்றுக்கொள்ளலாம். (தொலைபேசி 026-2227434, தொலைநகரி 026-2227401, மின்னஞ்சல் necord@sltnet.lk).

06. ஒப்பந்த ஆவணங்களை 2004 ஆனி 29 இல் இருந்து 2004 ஆடி 13 வரை முற்பகல் 9.30 இருந்து பிற்பகல் 3.00 வரை வேலை நாட்களில் மேற்படி அலுவலகத்திலிருந்து, மீளளிக்கப்படாத கட்டணமாக ஒவ்வொரு வேலைக்கும் ரூபா 1000/= செலுத்தி கொள்வனவு செய்யப்படலாம்.

07. கேள்விகோருவோர் முன் தகுதிக்கு அவசியமான ஆவணத்தையும், பொறிவைக்கப்பட்ட இரு உறைகளில் புறம்பாகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள விலையிடப்பட்ட கேள்விகளையும் கொண்டிருக்க வேண்டும்.

08. அவ்வவ் வேலைகளுக்குரிய ஒப்பந்தப் பிணைமுறிகளுடன் பொறிவைத்த கேள்விகள் தலைவர், கேள்விச்சபை, NECORD, 140, மின்சாரநிலைய வீதி, திருகோணமலை என்ற முகவரிக்கு 2004 ஆடி 20 முற்பகல் 2.00 மணிக்கு முன்பதாக கிடைக்க அனுப்பப்படல் வேண்டும். உடனடியாக கேள்விகள் திறக்கப்படும். அப்போது கேள்வி கோருவோர் அல்லது அவர்களது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகமளிக்க முடியும்.

09. முன்கூட்டிய ஒப்பந்தக் கூட்டமொன்று 2004 ஆடி 13 முற்பகல் 11.30 இற்கு NECORD, 140, மின்சாரநிலைய வீதி, திருகோணமலை என்ற முகவரியிலுள்ள எமது காரியாலயத்தில் நடைபெறும்.

10. கேள்விகள் தயாரிப்புக்கு அல்லது ஒப்படைப்புக்கு கேள்விகோருவோருக்கு ஏற்படும் ஏதாவது ஆகுசெலவுகளுக்கு, அல்லது செலவீனங்களுக்கு தொழில் தருணர் பொறுப்பாகமாட்டார்.

*த. லங்காநேசன்,*
*கேள்விச்சபை தலைவர்,*
*வடக்கு கிழக்கு சமுதாய மீளமைப்பு அபிவிருத்தி திட்டம்,*
*140, மின்சார நிலைய வீதி,*
*திருகோணமலை.*

(சி-10045)



சிறிலங்காவுடன் இரண்டு டெஸ்ட் போட்டிகளிலும், ஐந்து ஒரு நாள் போட்டிகளிலும் கலந்து கொள்ளும் முகமாக தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியினர் நேற்று முன்தினம் கொழும்பு வந்தடைந்தனர்.

# இங்கிலாந்து-மேற்கிந்தியத்தீவு இரண்டாவது டெஸ்ட் இன்று

இங்கிலாந்து-மேற்கிந்தியத்தீவுகள் அணிகளுக்கிடையிலான 2ஆவது டெஸ்ட்போட்டி இன்று எஜ்பொஸ்ரனில் ஆரம்பமாகிறது.

210 ஓட்டங்களால் முதலாவது டெஸ்ட் போட்டியில் தோல்வியடைந்த மேற்கிந்தியத் தீவுகள் அணி இப்போட்டியில் அனுபவமிக்க பந்து வீச்சாளரான கொலிமோரை இணைத்துள்ளது. இவரை இணைப்பதன் மூலம் தகுந்த பலன் கிடைக்கும் எனத் தான் நம்புவதாக அணித்தலைவர் பிரைன் லாரா தெரிவித்துள்ளார். முதலாவது போட்டியில் பங்கேற்ற ரவிராம்போல் காயம் காரணமாக நாடு திரும்புவதால் புதிய பந்து வீச்சாளர் கொலிமோர் இணைக்கப்பட்டுள்ளார்.


இதேவேளை முதலாவது டெஸ்ட் போட்டியில் தான் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்று இங்கிலாந்தை முதலில் துடுப்பெடுத்தாட அழைத்தமை சரியானதே என லாரா தெரிவித்துள்ளார். தமது பந்து வீச்சாளருக்கு ஏற்றதாக இருக்கும் எனத் தான் நம்பியதாகவும் ஆயினும் சரியான முறையில் பந்துவீச்சைக் கைக்கொள்ளாததால் முதலாவது போட்டியில் தோல்வியைத் தழுவியதாகவும் லாரா தெரிவித்துள்ளார்.

இங்கிலாந்து அணியில் இரண்டாவது போட்டியிலும் மார்க்புட்சர் பங்கு பற்றமாட்டார் எனவும் இவரின் இடத்தில் தொடர்ந்தும் றொபட்கீ விளையாடுவார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.றொபட்கீ கடந்த போட்டியில் 221 ஓட்டங்களைப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# சூதாட்டம் தொடர்பாக உடும்பே விசாரணை

கென்ய கிரிக்கெட் அணியின் தலைவர் மொறிஸ்உடும்பே சூதாட்டக்காரர் ஒருவரிடம் தொடர்பு வைத்திருந்ததாகக் குற்றம் சாட்டப்பட்டதையடுத்து இது தொடர்பான விசாரணையைச் சர்வதேச கிரிக்கெட் சபை தொடங்கியுள்ளது. கடந்த பல ஆண்டுகளுக்கு முன் சூதாட்டக் குற்றச் சாட்டுக்கள் அதிகரித்ததையடுத்து இது குறித்து கண்காணிக்க சர்வதேச கிரிக்கெட் கவுன்சிலான ஐ.சி.சி நடவடிக்கை எடுத்து வருகிறது. இந்நிலையில் கென்ய கிரிக்கெட் அணியின் தலைவர் மோறிஸ் உடும்பே பிரபலமான ஒரு சூதாட்டக்காரருடன் தொடர்பு வைத்திருந்ததாகவும், இதன் மூலம் கிரிக்கெட் விளையாட்டை அவர் களங்கப்படுத்தியிருப்பதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. இந்தப் புகார் பற்றி விசாரிக்க ஐ.சி.சி யும், கென்ய கிரிக்கெட் சபையும் இணைந்து அகமத் இப்ராஹிம் என்ற நீதிபதியை நியமித்துள்ளன. இதையடுத்து அகமது இப்ராஹிம் கென்ய தலைநகர் நைரோபியில் தமது விசாரணையைத் தொடங்கினார். ஆனால் இதற்குக் கடும் எதிர்ப்புத் தெரிவித்து மொறிஸ்உடும்பேயின் ரசிகர்க்ள் விசாரணை நடைபெறும் இடத்தில் போராட்டத்தில் ஈடுபட்டதால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

# ஆசியக் கிண்ணத்தைக் கைப்பற்றுவோம்!



## கங்குலி நம்பிக்கை

ஆசியக் கிண்ணத்துக்கான இறுதிப்போட்டியில் தமது அணி திறமையுடன் விளையாடிக் கிண்ணத்தைக் கைப்பற்றும் என இந்திய அணியின் தலைவர் கங்குலி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஆசியக் கிண்ணசுப்பர் லீக் போட்டியில் சிறிலங்கா அணியை வெற்றி கொண்ட பின்னர் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்; ஆசியக் கிண்ணத்துக்கான சுப்பர் லீக் போட்டியில் தனது அணி வெற்றி பெற்றிருப்பினும் வீரர்கள் சிறப்பாக விளையாடவில்லை எனவும் தமது அணி இப்போட்டியில் 300க்கு மேற்பட்ட ஓட்டங்களைக் குவிக்கும் வாய்ப்பிருந்ததாகவும் வீரர்கள் கவனத்துடன் ஆடவில்லை என்றும், தெரிவித்த அவர் வரும் ஞாயிறன்று நடைபெறும் இறுதிப் போட்டியில் திறமையுடன் விளையாடிக் கிண்ணத்தைக் கைப்பற்றுவோம் என்றும் கூறியுள்ளார்.

# 2006 ஆசியக் கோப்பை கிரிக்கெட் பாகிஸ்தானில் நடைபெறும்

## முகமது அஸ்ரபுல்

அடுத்த ஆசியக்கோப்பை கிரிக்கெட் போட்டியை பாகிஸ்தான் நடத்துகிறது. 2006 அக்டோபர்-டிசம்பர் மாத இடைவெளியில் அப்போட்டி நடைபெறும் என ஆசியக் கிரிக்கெட் கவுன்சில் தலைமை நிர்வாகி முகமது அஸ்ர.ஃ.புல் ஹக் தெரிவித்துள்ளார்.அடுத்த ஆண்டு முதல் ஆசிய டெஸ்ட் கிரிக்கெட் போட்டியை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்றார். அவர் 2010 வரை ஆசியடெஸ்ட் போட்டி ஆசியக்கோப்பைப் போட்டியை நடத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் ஒவ்வொரு ஆண்டும் மாறிமாறி ஒரு போட்டி நடைபெறும் என்றார் அவர். ஆசிய டெஸ்ட் போட்டியைத் தொடர்ந்து நடந்த ஆசியக்கிரிக்கெட் கவுன்சில் பொதுக் குழுக்கூட்டம் இலங்கையில் நடக்கிறது. அப்போது போட்டிகளில் பங்கேற்கும் நாடுகளுக்குப் பரிசுத் தொகைகளைப் பகிர்ந்தளிப்பது தொடர்பாக விவாதிக்கப்படும் என்றார்.

# ஒலிம்பிக் - தொடரும் அமெரிக்க குழுவுக்கான பாதுகாப்பு சர்ச்சை

எதென்சில் தொடங்க இன்னும் 3வார காலமே உள்ள நிலையில் அமெரிக்க குழுவுக்கான பாதுகாப்பு குறித்த சர்ச்சை நீடித்து வருகிறது. 2001 செப்டம்பர் 11 இல் நடந்த உலக வர்த்தக மையத் தாக்குதலுக்குப் பிறகு அமெரிக்கா சந்திக்கும் முதலாவது ஒலிம்பிக் போட்டியாக எதென்ஸ் போட்டி அமைந்துள்ளது. இந்நிலையில், வீரர்களைப் பாதுகாக்க அந்நாட்டு அரசு முழுக் கவனம் செலுத்தி வருகிறது. தீவிரவாதிகள் தாக்கலாம் என்ற அச்சத்தால் குழுவுடன் 150 சிறப்புபாதுகாப்புப் படையினரை ரூபா 13.5 கோடி செலவில் அனுப்ப அமெரிக்கா முடிவு செய்துள்ளதாக கடந்த வாரம் அந்நாட்டின் அறிக்கை தெரிவித்துள்ளது. ஆனால் அக் குழுவினர் ஆயுதத்துடன் வந்தால்தான் கிரீஸ் நாட்டுக்கு தலைவலி. ஆனால் 'ஆயுதம்' குறித்து அந்த அறிக்கையில் தகவல் ஏதும் இல்லை. குழுவுடன் ஆயுதம் தாங்கிய படையை எமது மண்ணில் அனுமதிக்க மாட்டோம் என போட்டியை நடத்தும் கிரீஸ் ஏற்கனவே தெரிவித்துள்ளது. இதற்கிடையே பயிற்சியின் போதே அணியினரைத் தீவிரவாதிகள் தாக்கலாம் என அமெரிக்கா சந்தேகமடைந்துள்ளது. போட்டிக்காக 70 ஆயிரம் பாதுகாப்புப் படையினரை (வீரர் ஒருவருக்கு தலா 7 பேர்) கிரீஸ் களத்தில் இறக்க உள்ள நிலையில், நேற்டோ படைகளும் கிரீஸுக்கு வெளியே ஆயத்த நிலையில் வைக்கப் பட்டுள்ளன.

# அரை இறுத்க்கு முன்னேற்னார் ஆனந்த்



டார்ட்மன்ட் ஸ்பார்கசன்ஸ் செஸ் போட்டியின் அரை இறுதிக்கு இந்தியாவின் கிராண்ட் மாஸ்டர் விஸ்வநாதன் ஆனந்த் முன்னேறினார். 5ஆவது சுற்று ஆட்டத்தில் ரஷ்யாவின் செர்ஜி ருப்லெவ்ஸ்கியை வென்று அரை இறுதித் தகுதியைப் பெற்றார் அவர். அதே பிரிவிலுள்ள ரஷ்யாவின் பீட்டர் ஸ்விட்லரும் அரை இறுதிக்கு முன்னேறினார். 5 ஆட்டங்களில் 3.5 புள்ளிகளை முன்னிலை பெற்றுள்ளார் ஆனந்த். ஸ்விட்லர் 3புள்ளிகளுடனும், ருப்லெவ்ஸ்கி 2 புள்ளிகளுடனும், நைடிட்ஸ்ட்ச் 1.5 புள்ளிகளுடனும் உள்ளனர். இரண்டாவது பிரிவில் கிராம் னிக், லேகோ, போலோகான், கர்ஜாகின் தலா 2.5 புள்ளிகளுடன் உள்ளனர்.

# ரூ.6 கோடி செலவில் ஒலிம்பிக் பதக்கங்கள்!

ஒலிம்பிக்கில் வெற்றி பெறும் வீரர், வீராங்கனைகளுக்கு வழங்கப்படவுள்ள பதக்கங்கள் இந்த வார இறுதியில் தயாராகிவிடும் என உற்பத்தி செய்யும் நிறுவனம் தெரிவித்துள்ளது. ஒலிம்பிக் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே தங்கம், வெள்ளி, வெண்கலப்பதக்கங்கள் வழங்கப்படுகின்றன. எதென்சில் ஆகஸ்ட் 13 முதல் 29 வரை நடைபெறும் ஒலிம்பிக் போட்டியில் மொத்தம் உள்ள விளையாட்டுக்களுக்கும் 3 ஆயிரம் பதக்கங்கள் தயார் செய்யப்பட்டு வருகின்றன தங்கம், வெள்ளி, தலா 986 பதக்கங்களும், வெண்கலம் 1150 பதக்கங்களும் உற்பத்தி செய்ய அமைப்புக்குழு கோரியுள்ளது. ஜிம்னாஸ்டிக்ஸ், பளுதூக்குதல் போட்டிகளில் ஒருவருக்கும் மேலானவர்கள் 3ஆவது இடத்தைப் பெறுவதே வெண்கலப்பதக்கம் அதிகமாக உற்பத்தி செய்யப்படுவதற்குக் காரணம் எதென்சில உள்ள "எப்ஸிமோல்" எனும் தனியார் நிறுவனம் கடந்த 3 மாதங்களாக இப்பதக்கங்களைத் தயார் செய்து வருகிறது. இதற்காக தங்கஆசாரிகள் முதல் கம்பியூட்டர் பொறியிலாளர் வரை 15 சிறப்புப் பெற்ற வல்லுனர்கள் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். ஒவ்வொரு பதக்கமும் 150 கிராம் எடையில் 6 செ.மீ. விட்டம் கொண்டதாக உருவாக்கப்பட்டுள்ளது தங்கப்பதக்கங்கள் மட்டும் முலாம் பூசுவதற்காக (தலா 6 கிராம்) சுவிட்சர்லாந்து கொண்டு செல்லப்படுகிறது. பதக்கங்களுக்காக மட்டும் ரூபா 6 கோடிக்கும் மேலாக எதென்ஸ் அமைப்புக் குழு செலவிட்டுள்ளது.

# செரீனாவை வென்றார் டேவன்போர்ட்

லாஸ்ஏஞ்சலீஸில் நடைபெற்ற உலக மகளிர் டென்னிஸ் போட்டியில் அமெரிக்காவின் செரீனா வில்லியம்சை வென்றார் லின்ட்சே டேவன்போர்ட் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இறுதிப்போட்டியில் அமெரிக்காவின் டேவன்போர்ட்

6-1,6-3 என்ற செட் கணக்கில் செரீனாவை சுலபமாக வென்றார். இரு வாரங்களில் டேவன்போர்ட் வெல்லும் இரண்டாவது பட்டம் இது என்பது குறிப்பிட்டத்தக்கது. கடைசியாக டேவன்போர்ட்டுடன் மோதிய 4ஆட்டங்களிலும் செரீனா வென்றுள்ளார். தரவரிசையில் செரீனா முதல் இடத்திலும், டேவன் போர்ட் மூன்றாவது இடத்திலும் இருந்தனர்.

# யாழ். மாவட்ட வீரர்களுக்கு இரண்டாம் இடம்

தென்கொரியாவில் நடைபெற்ற உலக சமாதான விளையாட்டு விழாவில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த இரண்டு மாணவர்கள் இரண்டு வெவ்வேறு போட்டிகளில் இரண்டாம் இடத்தைப் பெற்றுள்ளனர். உயரம் பாய்தலில் மரியநாயகம், சஞ்சீவ் என்பவரும், 110 மீற்றர் தடை தாண்டல் ஓட்டப் போட்டியில் சுமித்குமார் கமலமோகன் என்பவரும் இரண்டாம் இடங்களைப் பெற்றுள்ளனர்.

## ஆசியக் கிண்ண வலைப்பந்தாட்டம்

# அரையிறுதியில் சிறிலங்கா சிங்கப்பூர்

கொழும்பில் நடைபெற்றுவரும் ஐந்தாவது ஆசியக் கிண்ண கனிஷ்ட வலைப்பந்தாட்டப் போட்டியின் அரையிறுதிப் போட்டியில் சிறிலங்காவும் சிங்கப்பூரும் இன்று மோதவுள்ளன.

இதேவேளை இரண்டாவது அரையிறுதிப் போட்டியில் மலேசிய அணி தாய்லாந்து அணியை எதிர்கொள்ளவுள்ளது.

இது இவ்வாறிருக்க மலேசிய அணிக்கு எதிராக நேற்று நடைபெற்ற போட்டியில் சிறிலங்கா அணி தோல்வி அடைந்துள்ளது.





# ஜேர்மன் கால்பந்து அணிப் பயிற்சியாளராக முன்னாள் தலைவர் கிளின்ஸ்மான்

ஜேர்மன் அணி தங்களுக்கான புதிய பயிற்றுவிப்பாளராக ஜேர்மன் அணியின் முன்னாள் தலைவர் கிளின்ஸ்மானை மீண்டும் அழைத்துள்ளது.

39 வயதான கிளின்ஸ்மான் அமெரிக்காவில் வசித்து வந்தார். தற்போது மீண்டும் ஜேர்மன் அணிக்குப் பயிற்சி வழங்குவதற்கு ஜேர்மன் திரும்பியுள்ளார்.

அந்தவகையில் ஜேர்மனிக்காகத் தொடர்ந்து இரண்டு வருடங்கள் இந்தப் பகுதியில் இருப்பார் எனத் தெரிவிக்கப்படுகிறது. 2006 உலகக்கிண்ணப் போட்டிவரை பயிற்சியாளராக இருப்பார்.



## சிந்தனைக்கு

நாம் அரசியல் வாதிகளல்லர்; நாம் புரட்சிவாதிகள்.

தமிழீழத்தேசியத் தலைவர்.


# ஈழநாதம்

மக்கள் நாளிதழ்

யாழ். சாலை, கிளிநொச்சி. 29-07-2004



தொலைபேசி 060-2213244
தொலைநகல் 021-2283948
மின் அஞ்சல்
Daily@ eezhanatham. com
natham 23ela@yahoo. com


## கெடுபிடிக்கான முன்னறிவிப்பு!

கொழும்பிலும், நாட்டின் ஏனைய பகுதிகளிலும் பாதுகாப்பைப் பலப்படுத்த 15 அம்சத் திட்டத்தை நடைமுறைப்படுத்த நடவடிக்கை எடுப்பதென சிறிலங்காப் பாதுகாப்பு அதிகாரிகள் மேற்கொண்ட முடிவுகள் கொழும்பு உட்பட அனைத்துப் பகுதியிலும் இராணுவக் கெடுபிடிகள் அதிகரிக் கப்போவதற்கான முன்னறிவிப்பாகவே கொள்ளத் தக்கதாகும். வெளிப்படையாகப் பார்த்தால் கருணாவின் நெருங்கிய சகாக்கள் ஏழு பேர் சுட்டுக்கொல்லப்பட்டதன் விளைவு என இதனைக் கூறலாம்.

கொழும்பு நகரின் பாதுகாப்பைப் பலப்படுத்துவதென்பதும் வன்முறைகள் நடைபெறுவதைத் தடுப்பதென்பதும் குறை கூறக் கூடியதோ அன்றிக் குற்றம் சாட்டக்கூடியதொரு விடயமோ அல்ல. ஆனால் இவர்கள் மேற்கொள்ளும் பாதுகாப்பு நடவடிக்கைகளினால் வன்முறைகள் குறைவடையுமா? பாதுகாப்புப் பலப்படுமா? என்பதே கேள்வியாகும்.

சிறிலங்காவின் அண்மைக்கால அரசியல் வரலாற்றை எடுத்துக் கொண்டால் பாதுகாப்பு உச்சமாக இருந்த காலத்திலும், இடங்களிலுமே பெரும் வன்முறைகளும், தாக்குதல்களும் இடம்பெற்றுள்ளன. அதாவது அவரசரகாலச்சட்டம் பயங்கரவாதத்தடைச் சட்டம் அமுலில் இருந்தபோது பாதுகாப்புக்கெடுபிடிகள் உச்சமாக இருந்தபோதும் உச்சமாக இருந்த இடங்களிலுமே வன்முறைகளோ தாக்குதல்களோ இடம்பெற்றுள்ளன.

இதேவேளை பாதுகாப்புக் கெடுபிடிகள் என்பன பெருமளவில் மக்களையே குறிப்பாகத் தமிழ் மக்களையே இம்சித்தன, தமிழ் மக்களுக்கு சுயகௌரவம் என்பது ஒன்று உண்டா? என்ற வகையில் இப் பாதுகாப்புக் கெடுபிடிகள் மக்களைத் துன்புறுத்தின. ஆனால் இக்கெடுபிடிகள் மத்தியிலும் தாக்குதல்களும், வன்முறைகளும் இடம்பெறவே செய்தன. மாறாகப் பாதுகாப்புக்கெடுபிடிகளோ அவசர காலச்சட்டங்களோ பயங்கரவாதத் தடைச்சட்டமோ இல்லாத காலப் பகுதியிலேயே வன்முறைகளும் தாக்குதல்களும் தணிந் திருந்தன. இல்லாது இருந்தன.

அதாவது பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கும் வன்முறைத் தாக்குதல்களுக்கும் இடையில் தொடர்புகள் இருந்ததாக இல்லை. அதாவது பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டதால் வன்முறைத் தாக்குதல்கள் குறைந்ததாகவோ அன்றி பாதுகாப்புக் குறைவடைந்த காலத்தில் மிகப் பெரும் வன்முறைகள் இடம்பெற்றதாகவோ இல்லை. பொதுவில் எதிர்மாறான செயற்பாடுகளே அவதானிக்கத்தக்கதாகவுள்ளது. இந் நிலையில் (தற்பொழுது கொழும்பில் இடம்பெற்ற இரு தாக்குதல் சம்பவங்கள்(தற்கொலைத் தாக்குதல் கருணாவின் சகாக்கள் மீதான தாக்குதல்) பாதுகாப்பு ஏற்பாடுகளுடன் தொடர்புபட்டது எனக் கூறுதல் பொருத்தப்பாடற்றதொன்று.

அவ்வாறானால் இச் சம்பவங்களுக்குக் காரணம் என்ன? பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரப்படுத்தப்படாமல் இவற்றைத் தடுக்க முடியுமா? என்பது போன்ற கேள்விகளுக்குப் பொருத்தப்பாடானதும் எடுத்துக்காட்டுக்களுடன் கூடியதுமான சாதகமான பதில்கள் இருக்கவே செய்கின்றன. இதனைச் சுருக்கமாகக் கூறுவதானால் ஆட்சியாளர்களின் கொள்கைகளே வன்முறைகளுக்கும் தாக்குதல்களுக்கும் காரணமாகின்றன.

எடுத்துக்காட்டாக யுத்த நிறுத்த உடன்பாடு செய்யப்பட்டு சுமார் இரண்டாண்டு காலம் பெரும் வன்முறைகளும் தாக்குதல் சம்பவங்களும் இடம்பெறாத நிலையே காணப்பட்டது. அதாவது அவசர காலச் சட்டம், பயங்கரவாதத் தடைச்சட்டம் அமுலாக்கம் இடை நிறுத்தப்பட்டு ஆயுதப்படையினரின் கெடுபிடிகளும் நிறுத்தப்பட்ட தனால் இக்காலப்பகுதியில் வன்முறைகள் ஓய்ந்திருந்தன. ஆனால் அண்மைக்காலத்தில் வன்முறைகளும் தாக்குதல்களும் அதிகரித்த போக்கில் காணப்படுகின்றதெனில் யுத்த நிறுத்த உடன்பாட்டிற்கும் சமாதானச் சூழ்நிலைக்கும் மாறான வகையில் அரசியல் நடவடிக்கைகளில் புதிய ஆட்சியாளர்கள் அக்கறை காட்டத் தொடங்கியுள்ளமையே காரணமாகும். எடுத்துக்காட்டாகக் கருணாவின் விவகாரத்தை அரசாங்கம் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்தத் தீர்மானித்தமையே ஆகும்.

கொழும்பில் அண்மையில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவங்களுக்கு யார் பொறுப்பாக இருந்தாலும் கருணா விவகாரத்தைப் பின்னிப் பிணைந்ததாகவே அவை உள்ளன. அதாவது கருணாவை அரசாங்கமோ அன்றி அதன் இராணுவப் புலனாய்வுத்துறையோ பயன்படுத்திக்கொள்ள முற்படாது இருந்திருப்பின் கருணாவோ அன்றி அவர்களின் சகாக்களோ கொழும்பு சென்றிருக்க முடியாது. அங்கிருந்து கொண்டு மட்டக்களப்பில் வன்முறைகளுக்கு திட்டமிட்டிருக்கவும் முடியாது. இதே சமயம் கருணாவின் சகாக்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டிருக்கவும் மாட்டாது.

ஆகையினால் பாதுகாப்பு நடவடிக்கைகளைத் தீவிரப்படுத்துதல் என்பது வன்முறைகளையோ, தாக்குதல்களையோ பெரியளவில் கட்டுப்படுத்தஉதவப் போவதில்லை. அது அப்பாவி மக்கள் மீதே அழுத்தத்தைப் பிரயோகிக்கவே உதவக் கூடியதாகும். ஆனால் அர சாங்கத்தின் கொள்கையே வன்முறையையும் தாக்குதல்களையும் நிறுத்தத்தக்கதாகும். அதாவது அரசாங்கம் நேர்மையாகவும் உளப்பூர்வமாகவும் இனப்பிரச்சினைக்கு ஓர் அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு முற்படுமேயானால் வன்முறைகளும் தாக்குதல்களும் இடம்பெறாது தவிர்த்துக் கொள்ள முடியும்.

# காணாமல் போனோர் குறித்த விசாரணைகளில் பாதுகாவலர் சங்கம் நம்பிக்கையிழப்பு

1996,97 ஆம் ஆண்டு காலப் பகுதிகளில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போனோர் தொடர்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்கொணர்வு மனு மீதான விசாரணையின் எதிர்காலம் தொடர்பாக தாங்கள் நம்பிக்கையிழந்து வருவதாக "படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கம்" தெரிவித்துள்ளது.

யாழ்.மேல் நீதிமன்றில் இடம் பெற்றுவரும் ஆட்கொணர்வு மனு மீதான விசாரணைகளிற்கு திட்டமிட்டு சட்டமா அதிபர் திணைக்களமும், படைத்தரப்பும் ஒத்துழைக்க மறுப்பதாகவும் காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கம் மேலும் குற்றஞ்சாட்டுகின்றது. குறிப்பாக எதிரிகளாக குற்றஞ் சாட்டப்பட்ட படை அதிகாரிகளோ அல்லது அவர்கள் தரப்பு சட்டத்தரணிகளோ தொடர்ச்சியாக நீதிமன்றிற்கு ஆஜராகாது விடுவதால் விசாரணைகள் தொடர்ச்சியாக மறுதிகதிக்கு ஒத்தி வைக்கப்படுவதாகவும் அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கின்றன.

அத்துடன் படை அதிகாரிகளை சந்தேக நபர்களாக அல்லது எதிரிகளாக பெயர் குறிப்பிடப்பட்டே பல ஆட்கொணர்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. ஆயினும் படைத்தரப்பு தம்முடன் தொடர்பு கொண்டிருக்கவில்லை எனத்தெரிவித்தும், சில வழக்குகளில் அரச சட்டத்தரணிகள் ஆஜராகாது இருந்து வருகின்றமையினையும் பாதுகாவலர் சங்கம் சுட்டிக் காட்டியுள்ளது.

இதனிடையே மேற்படி குற்றச் சாட்டுக்களை வலியுறுத்தி சட்டத்தரணி எம். றெமீடியஸ் யாழ்.மேல் நீதிமன்றில் நேற்று இடம் பெற்ற விசாரணையின் போது தனது தரப்பு வாதங்களை முன்வைத்துள்ளார். தனது தரப்புக்கட்சிக்காரர்கள் நாள்தோறும் ஆட்கொணர்வு மனு மீதான விசாரணைகளில் நம்பிக்கையிழந்து வருவதாக தெரிவித்த அவர் வறுமைப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த இவர்கள் வழக்குத் தவணைகளுக்காக அலைக்கழிக் கப்படுவதாகவும் கவலை தெரிவித்தார்.

இதனால் அவர்கள் பெரும் சிரமங்களிற்கு உள்ளாகிவருவதாகவும் தெரிவித்த எம்.றெமீடியஸ், சட்டமா அதிபர் திணைக்களம் திட்டமிட்டு இவ்வாறு விசாரணைகளுக்கு ஒத்துழைக்காது இழுத்தடித்து வருவதாகவும் குற்றஞ்சாட்டினார்.

கடந்த ஆண்டின் இறுதியில் யாழ்.மேல் நீதிமன்றில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போன 42 பேரின் சார்பில், அவர்களது குடும்பத்தவர்களால் ஆட்கொணர்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்ததும் அவர்கள் சார்பில் சட்டத்தரணி எம்.றெமீடியஸ் ஆஜராகி வருவதும் தெரிந்ததே.

இதேவேளை நேற்று யாழ். மேல் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட ஆட்கொணர்வு மனுமீதான விசாரணைகளை மீண்டும் எதிர்வரும் செப்டம்பர் 6ஆம் திகதிக்கு தவணையிட்டு மேல் நீதிமன்ற நீதவான் கே.பி.எஸ் வரதராசா ஒத்திவைத்துள்ளார். (27)

# ஜே.வி.பி. அமைச்சரின் சில பிரிவுகள் சு.கட்சி அமைச்சருக்கு மாற்றம்

### ரில்வின் சில்வா சனாதிபதியிடம் முறைப்பாடு

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள மகாவலி ஆற்றுப் பள்ளத்தாக்கு அபிவிருத்தி, ரஜரட்ட அபிவிருத்தி அமைச்சுக்கு மேலும் புதிய பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளமையால் ஜே.வி.பிக்கு உரித்தான விலங்கு வேளாண்மை, காணி, நீர்ப்பாசன அமைச்சுக்குச் சொந்தமான சில பிரிவுகள் சுவீகரிக்கப்பட்டு விட்டதாக ஜே.வி.பி.யினர் சந்திரிகாவிடம் முறையிட்டுள்ளனர்.

ஜே.வி.பி சார்பில்அதன் உறுப்பினரான ரில்வின் சில்வா சனாதிபதி சந்திரிகாவுக்கு கடிதம் மூலம் அனுப்பி வைத்துள்ள முறைப்பாட்டில் தெரிவித்துள்ளதாவது.

கடந்த 12 ஆம் திகதி அரசாங்கம் வெளியிட்ட வர்த்தகமானியில், நீர்வளம் தொடர்பான அனைத்து விடயங்களும் (பிரதேச மட்டத்திலும், நாடு முழுவதிலும்) மகாவலி அபிவிருத்தி, ஆற்றுப்பள்ளத்தாக்கு ரஜரட்ட அபிவிருத்தி அமைச்சின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக விசேட கலந்துரையாடல் ஒன்றை மேற்கொள்ளுமாறும் அதற்கான திகதியை அறிவிக்குமாறும் ரில்வின் சில்வா கடிதம் மூலம் கோரியிருக்கிறார்.

ஜே.வி.பியினர் கூட்டுச் சேரும் போது ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தில் புரிந்துணர்வுடன் நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவே கைச்சாத்திடப்பட்டுள்ளமையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டை முன்னேற்றுவதற்காகவே மக்கள் தமக்கு வாக்களித்திருப்பதாகவும் இந்த வர்த்தகமானிஅறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ள விடயங்கள் கூட்டு ஒப்பந்தத்துக்கு அச்சுறுத்தல் அளிப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரச்சினை தொடர்பாகவே ஆரம்பத்திலேயே அமைச்சுப்பதவிகளை ஏற்கப் பின்னடித்தமையும் அவர் நினைவுபடுத்தி விரைவில் இவ்விடயம் தொடர்பாக பேச்சுக்கள் நடத்துமாறும் கேட்டுள்ளார்.

# நாட்டை முன்னேற்றும் திட்டத்தை முன்னெடுக்க அரசியலமைப்பில் மாற்றம் செய்ய வேண்டும்

### மாதுலுவாவே சோபிததேரர் தெரிவிப்பு

நாட்டை முன்னேற்றும் திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல வேண்டுமாயின் புதிய ஆளும்கட்சி தற்போதைய அரசியலமைப்பை உடனடியாக மாற்ற வேண்டிய அவசியம் தோன்றியுள்ளதாக கோட்டே சிறி நாகமாதேவி விகாரையின் பிரதம தேரரான மாதுலுவாவே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

கடந்த 26 ஆம் திகதி பத்திரிகையாளரை சந்தித்து கருத்துத் தெரிவித்த அவர் விடுதலைப் புலிகள் தொடர்ந்து யுத்தநிறுத்த மீறல்களில் ஈடுபட்டுள்ளதால் தற்போது மீண்டும் யுத்தம் வெடிக்கும் அபாயம் தோன்றியிருப்பதாகவும் இதனைத் தடுக்க ஆளும் க்ட்சியும் எதிர்க்கட்சியும் இணைந்து இப்பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காண வேண்டும் என தெரிவித்துள்ளார்.

1994 ஆம் ஆண்டில் சந்திரிகா ஆரம்பித்த சமாதானத்திட்டமே தொடர்ந்து முன்னெடுக்கப்படுவதாக கூறிய அவர் கடந்த காலத்தை நோக்கினால் பிரேமதாசாவும் ஜே.ஆரும் அதற்கு பல வழிகளைக் கையாண்டது தெளிவாகும் என்றார்.

ரணில் விக்கிரமசிங்கவின் சமாதானம் பெயரளவிலேயே இருந்ததாகக் கூறிய அவர் இதனை உறுதிசெய்ய வேண்டுமாயின் இரு கட்சிகளும் இணைந்து செயற்படவேண்டும் எனத் தெரிவித்தார்.

## ஆதரவாக 13 மனுக்கள்

மதமாற்றச் சட்டத்திற்கு ஆதரவாக நேற்று உயர் நீதிமன்றத்தில் 13 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. இந்தச் சட்டம் தொடர்பான பிரேரணை ஏற்கனவே பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. அதேநேரம் இதற்கு எதிராக உயர் நீதிமன்றத்தில் 22 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (32)

# எதிர்வரும் சனிக்கிழமை நிலவு நீலநிறமாகத் தோன்றும்

(கொழும்பு)


நிலவு நீலமாகத் தோன்றும் அபூர்வ நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை இரவு ஏற்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பௌர்ணமி நாளான அன்றைய தினம் இடம்பெறவுள்ள இந்த அபூர்வ நிகழ்வு வெறும் கண்களால் பார்க்கும்போது இயல்பாகத் தோன்றும் என்றும் கூறப்படுகின்றது.

கடைசியாக கடந்த 2001ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 30ஆம் திகதி இது போன்று நீல நிலவு தோன்றியதாகவும், அடுத்து வரும் 2006, 2011, 2014 மற்றும் 2017 ஆகிய ஆண்டுகளில் மொத்தமாக பதினேழு நீல நிலவுகள் தோன்றவுள்ளதாகவும் ஆங்கில நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

# ஈழத்தமிழர்களுக்கு விரோதமாக இந்திய அரசாங்கம் செயற்படாது

## ம. தி. மு. க பொதுச் செயலர் வை. கோ நம்பிக்கை



(கொழும்பு)

"ஈழத்தமிழர்களுக்கு விரோதமாக இந்திய அரசு செயற்படாதென்ற நம்பிக்கை எனக்கு உள்ளது. இவ்வாறு ம.தி.மு.க பொதுச்செயலாளர் வை.கோ தெரிவித்துள்ளார். இலங்கை அரசு நினைப்பதைப்போன்று ஈழத்தமிழர் பிரச்சினையில் இந்திய அரசைத் தனக்குச்சாதகமாக ஆக்கிக்கொள்ள முடியுமென இலங்கை அரசு கருதுமேயானால் அம்மாதிரியான எண்ணம் ஈடுடேற விடாமல் தடுக்க நான் தொடர்ந்தும் பாடுபடுவேன் எனவும் வை.கோ தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்; ஈழத்தமிழர் விவகாரத்தில்' இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் நட்வர்சிங்கிடம் ஈழத்தமிழர்கள் நலன் குறித்த அனைத்துக் கோணத்திலும் தான் பேசியதாகவும் தனது பேச்சு மிகத் திருப்திகரமாக இருந்ததாகவும் இது குறித்துக் கவலை கொள் வதற்கு எதுவும் இல்லையெனவும் அவர் தெரிவித்தார்.

# கால்நடைகளை வெட்டுவதற்கு வன்னிப்பகுதியில் தடை

வன்னிப்பகுதியில் கால்நடைகளுக்கு கால்வாய் நோயின் தாக்கம் அதிகரித்துள்ளமையால் கால்நடைகளை வெட்டுவது தடை செய்யப்பட்டுள்ளது. இதனை மீறி வெட்டுபவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும். அத்துடன் நோய்க் குணம் தென்படும் கால்நடைகளின் பாலைப் பாவிப்பதைத் தவிர்த்தல் வேண்டும் என தமிழீழ சுகாதார சேவையினர் அறியத் தந்துள்ளனர்.

## இலங்கையின்...

கிடந்த யுத்தம் தற்போது கொஞ்சம் கொஞ்சமாகச் சிலிர்த்து வருகிறது. முடங்கியுள்ள சமாதானப் பேச்சு வார்த்தைகளை மீண்டும் தொடங்கும் எவ்வித முயற்சிகளும் தற்போதைய விஜயத்தில் ஏற்படவில்லை எனவும் குறிப்பிட்டார். மாறாக இந்த விஜயத்தின் போது போர்நிறுத்தத்தைக் காப்பாற்றுவதற்கு முன்னுரிமை தரப்பட்டது. தற்போதைய நிலைமை அபாயமானதெனவும் இத்தகைய கொலைகள் உக்கிரமற்ற வகையில் நடக்கும். ஒரு போரில் தான் முடியும்.

இந்த நிலைபற்றி அவ்வளவாக அலட்டிக்கொள்ளாத மனப்பான்மை அவசரமாக இந்நிலைமையை மாற்றமுயலாமை போன்றவை தமக்குக் கவலையளிக்கிறது. இலங்கை அரசும் விடுதலைப் புலிகளும் ஒன்றை நன்கு புரிந்து கொள்ள வேண்டும் ஓர் இராணுவத் தீர்வுக்கும் சமாதான வழிமுறைக்கும் இடைப்பட்ட பாதை என்பது இல்லை என்பதை இரு தரப்பினரும் புரிந்துகொள்ள வேண்டும் எனவும் விதர்ஹெல்கேசன் தெரிவித்துள்ளார்.

## சந்திரிகா...

வுள்ளதாகத் தெரியவருகிறது. இதற்கிடையில், இம்மாநாட்டின் பின்னர் சந்திக்கவுள்ள சனாதிபதி சந்திரிகாவும், இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கும் தற்போதைய சிறிலங்காவின் அரசியல் நெருக்கடி நிலை நின்றுபோயுள்ள சமாதான முயற்சிகள் குறித்தும் திருகோணமலைத் துறைமுகம் குறித்தும் விரிவான பேச்சுக்களை நடாத்தவுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. இதன் காரணமாக, இந்தியத் தரப்பில் வெளிவிவகார அமைச்சர் நட்வர்சிங், தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜேஎன் டிக்சிற் போன்றோரும், சிறிலங்காவிலிருந்து வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர், வர்த்தக அமைச்சர் பெர்ணாண்டோபுள்ளே போன்றோரும் தாய்லாந்து பயணமாகியிருப்பதாகப் பிந்திய செய்திகள் சுட்டிக் காட்டுகின்றன. இது தவிர, சிறிலங்காவின் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறிவிக்கிரமநாயக்கவையும் மாநாட்டின் முடிவில் தாய்லாந்து வரும்படி சனாதிபதி பணித்துள்ளதாகப்பிறிதொரு செய்தி கூறுகிறது

## அம்பாறை...

குக் கொடுப்பதற்காக வழி வகைகள்ளச் செய்துள்ளார். கொடுப்பனவு மிகச் சிறிய தொகையே. இத் தொகை தொடர்ந்து கொடுக்கப்படும்

எமது போராட்டத்தைப் பலப் படுத்த படைப்பலம் தேவை. எம் மக்களுக்குப் போராட்ட விழிப்புணர்வு தேவை. இதை நீங்களும் ஊட்டலாம். அம்பாறை மாவட்டத்தில் பல அச்சுறுத்தல்கள் உள்ளன. இதனால் எம் மக்கள் பல பாதிப்புக்களைச்சந்தித்தும், அனுபவித்தும் உள்ளனர்.

எமது இயக்கம் வெளிப்படையாகக் கூறுவது என்னவென்றால் எமது படைக்குப் போராளிகள் தேவை. பிள்ளைகள் விரும்பினால் அவர்களை எம்மிடம் அனுப்புங்கள். எமது இயக்கத்தில் இணைந்து செயற்பட விரும்பாத வர்களுக்கு கல்வியறிவையூட்டி அவர்களைக் குடும்பத்திற்கும், சமுதாயத்திற்கும் நற்பயனை வகிக்கும் எதிர்கால சந்ததியாக வளர உதவி செய்யுங்கள்.

எம்மிடம் ஆயுதப்பயிற்சி பெற்ற அனைத்துப் போராளிகளும் எங்கு இருக்கின்றனரென்ற தகவல்களை எமக்குத் தெரிவிக்க வேண்டும். ஆயுதப்பயிற்சி பெற்றவர்கள் தீய சக்திகளோடும் எமது தேசியத்திற் எதிரானவர்களோடும் இணைந்து எமது தேசியத்திற்கெதிராகச் செயற்பட முனைவார்கள் எனவே இவர்களிடம் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளைப் பற்றிய விபரங்களை எமது அரசியல் துறைப்பணிமனைக்குத் தெரியப்படுத்துவது பெற்றோர்களின் தலையான கடப்பாடாகும்.

கருணா துயிலுமில்லத்திற்கு விளக்கேற்ற வருவார் என்ற வதந்தி எம்மக்கள் மத்தியில் பரப்பப்பட்டுள்ளது. இது ஒரு விசமப்பிரச்சாரம் கருணா தியாகி என்றால் எம் மண்ணில் மடிந்திருக்க வேண்டும். அவரது பல ஊழல்கள் அம்பலத்திற்கு வந்துள்ளன. இதை அனைவரும் நன்கறிவர். அவர் எம் மாவட்டத்தை விட்டு ஓடும்போது எமது மாவீரர்களின் ஆவணங்களைத் தீயிட்டு அழித்துவிட்டுச் சென்றுள்ளார். இது எவராலும் மன்னிக்க முடியாத பெரும்பழி எனவும் கூறினார்.

## சிறில...

ளான பெனாண்டோ ஜெயகாந்தன் மற்றும் அந்தோனி அனிஸ்ரன் ஆகிய 3 இளைஞர்களும் குறித்த காலப்பகுதியில் படையினரால் விசாரணைக்கென அழைத்துச் செல்லப்பட்டுப் பின்னர் காணாமற்போயிருந்தனர்.

இவர்களது பாதுகாவலர்களால் செய்யப்பட்ட ஆட்கொணர்வு மனு மீதான விசாரணைகள் நேற்று யாழ் நீதிமன்றில் நீதவான் இ.த விக்கினராஜா முன்னிலையில் இடம் பெற்றிருந்தது ஆட்கொணர்வு மனுவில் முதலாம் எதிரிகளாகத் தெரிவிக்கப்பட்டிருந்த குருநகர், கொய்யாத் தோட்டப் படைமுகாம் பொறுப்பதிகாரிகளாக அப்போதிருந்த இரு படை அதிகாரிகளுக்கும் அழைப்பாணை அனுப்பப்பட்டிருந்தது.

எனினும் அழைப்பாணைகள் பல தடவைகள் அனுப்பப்பட்ட போதும் குறித்த படை அதிகாரிகள் இதுவரை நீதிமன்றில் ஆஜராகியிருக்கவில்லை.

இந்நிலையிலேயே இராணுவத் தளபதியை நீதிமன்றில் ஆஜராக உத்தரவிட்ட நீதவான் விசாரணைகளை செப்ரெம்பர் 7ஆம் திகதிக்கு ஒத்திவைத்துள்ளார். (27)

## கோப்ரல்...

கைது செய்யப்பட்டு காணாமல் போன செல்லத்துரை நந்தகுமார் (வயது 21) எனும் இளைஞன் உட்ளிட்ட் எழுவரது ஆட்கொணர்வு மனுக்கள் மீதான விசாரணைகள் மேல் நீதிமன்றில் இடம்பெற்றது.

ஆட்கொணர்வு மனுக்கள் சிலவற்றில் முதலாம் எதிரியாக குறிப்பிடப்பட்டிருந்த கோப்ரல் ராஜபக்ஷ விமான மூலம் வெலிக்கடை சிறையிலிருந்து நீதிமன்றிற்கு அழைத்துவரப்பட்டிருந்தார். விசாரணையின் போது தனது தரப்பில் ஆஜராக தென்னிலங்கையிலிருந்து சட்டத்தரணிகளை நியமிக்க இரண்டு மாத கால அவகாசத்தை ராஜபக்ஷ கோரியிருந்தார்.

இதனை நிராகரித்த மேல்நீதிமன்ற நீதவான் ஒருவார காலத்தினுள் சட்டத்தரணியினை நியமிக்க கால அவகாசம் வழங்குவதாக தெரிவித்ததுடன் அதுவரை எதிர்வரும் ஓகஸ்ட் 4ஆம் திகதி வரை யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைப்பதற்கான உத்தரவினைப் பிறப்பித்தார்.

எனினும் கோப்ரல் ராஜபக்ஷவினை அழைத்து வந்த பொலிஸ் அதிகாரிகள் பாதுகாப்புக் காரணங்களை முன்வைத்து யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைப்பது உசிதமல்ல எனத் தெரிவித்தனர்.

ஆயினும் அதனை நிராகரித்த மேல் நீதிமன்ற நீதவான் யாழ் சிறைச்சாலையில் தடுத்து வைப்பதற்கான உத்தரவை பிறப்பித்ததுடன், இது தொடர்பாக சிறைச்சாலைகள் ஆணையாளர் நாயகத்திற்கு அறிவிப்பதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் தனக்குத் தேவையான சட்டத்தரணி ஒருவரை நியமித்துக்கொள்ள சட்ட உதவிகள் மையத்தின் ஒத்துழைப்பை பெற்றுக்கொள்ள முடியுமெனவும் தெரிவித்தார்.

எனினும் கோப்ரல் ராஜபக்ஷ தென்னிலங்கையினை சார்ந்த சட்டத் தரணி ஒருவரை நியமிக்கவே விருப்பம் தெரிவித்தார். இதனையடுத்து அங்கு ஆஜராகியிருந்த சட்ட உதவிகள் மையத்தின் பிரதிநிதி, அனுராதபுரத்தைச் சேர்ந்த சட்டத்தரணி ஒருவரை நியமித்து உதவ சம்மதம் தெரிவித்தார். இதையடுத்து விசாரணைகளை செப்ரம்பர் 6ஆம் திகதிக்கு நீதவான் ஒத்திவைத்தார். (27)

## தமிழீழ...

பெண் மாவீரர் 2 ஆம் லெப் மாலதி அவர்களின் தந்தையார் பேதுறு மூன்று மாவீரர்களின் தாயாரான திருமதி. தில்லைநாயகம் ஆகியோர் ஏற்றிவைத்தனர்.

தமிழீழத் தேசியக் கொடியை தமிழீழக் காவல்துறையின் நடுவப்பணியக மேற்பார்வையாளர் மாதவன் ஏற்றிவைத்தார். மன்னார் மாவட்டத்துக்கான மாவட்ட நீதிமன்றப் பெயர்ப்பலகையை மன்னார் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ். இனியவன் திரைநீக்கம் செய்து வைத்தார். அடுத்து மாவட்ட நீதிமன்றக் கட்டடத்தை தமிழீழ மாவீரர் பணிமனைப் பொறுப்பாளர் பொன். தியாகம் நாடாவைவெட்டித் திறந்து வைத்தார். நீதி மன்ற அலுவலகக் கட்டடத்தை அகமது லெவ்பை ஆதம்பாவா திறந்து வைத்தார்.

தொடர்ந்து மாவட்ட நீதிமன்றின் வழக்கு விசாரணைகள் இடம் பெற்றது. இதனைத் தொடர்ந்து தலைமை நீதியாளர் ஒப்பிலான் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமானது. இதில் சிறப்புரையை தமிழீழ நீதிநிர்வாகத் துறைப் பொறுப்பாளர் பரா நிகழ்த்தினார். தொடர்ந்து மன்னார் மாவட்ட நீதிமன்ற பணியாளர் தவராசாவின் நன்றியுரையுடன் நிகழ்வுகள் நிறைவடைந்தது.

இந்நிகழ்வில் தமிழீழ மாவட்ட நீதியாளர்கள், போராளிகள், தமிழீழ காவல்துறை உறுப்பினர்கள், சட்டவாளர்கள், பொதுமக்கள் எனப பெருமளவானவர்கள் கலந்து கொண்டனர். (லோ,தீ)

## சிறிலங்காவில்...

வின் கொள்கை உருவாக்கல் நெறிமுறைகளின் கீழ் செயற்படுகின்றது. இந்த கூட்டத்தொடரின் தலைவராக இந்தியாவைச் சேர்ந்த கல்விமானும் நிபுணருமான ஒருவர் தேர்வு செய்யப்பட்டுள்ளார். இவ் உப ஆணைக்குழு முன் சிறிலங்காவின் சட்ட ஒழுங்கு நடைமுறை தொடர்பாக ஆசிய சட்ட வள நிறுவனம் சமர்ப்பித்த விரிவான அறிக்கை சிறிலங்கா மீதான இன்றைய கடும் விமர்சனங்களிற்கு வழிசமைத்தது. இவ்வறிக்கையானது எழுத்து மூலம் சமர்ப்பிக்கப்பட்டு அனைத்து உறுப்பினர்களுக்கும், பார்வையாளர்களாக பங்கேற்ற நாடுகளிற்கும் ஐ.நா பணிமனையால் விநியோகிக்கப்பட்டிருந்தது. எனினும், இவ்வறிக்கையினை மனித உரிமைகள் உப ஆணைக்குழு தனது தற்போதைய விதிமுறைகளுக்குட்பட்டு தனித்துவமாகப் பரிசீலிப்பதை தவிர்த்துவருகின்றது.

இதனை விவாதிக்க விடாது தவிர்ப்பதற்கான இராஜதந்திர நகர்வுகளை சிறிலங்கா மேற்கொண்டதாக உப ஆணைக்குழுவில் பங்கேற்ற அரசசார்பற்ற நிறுவனங்கள் கருதின. இதனால் நாடுகள் தொடர்பான விவாதத்தில் பங்கேற்ற இரு சர்வதேச நிறுவனங்கள் இவ்விவகாரத்தை எடுத்துக் கொண்டன.

இவ்விடயம் தொடர்பாக உரையாற்றிய ஆசிய சட்டவள நிறுவனத்தின் ஐ.நாவிற்கான பிரதிநிதி சிறிலங்காவின் சட்ட அமுலாக்கல் நிலவரத்தில் ஏற்பட்டுள்ள சீரழிவுகள் தொடர்பான அச்சத்தை வெளியிட்டார். அரசியல் அழுத்தம் மற்றும் பல காரணங்களால் பாதிக்கப்பட்டவர்களே தொடர்ந்தும் அடக்குமுறைக்குட்பட்டு பாதிக்கப்படும் ஆபத்தான சூழல் அங்கு எழுந்துள்ளதற்கான ஆதாரங்களை முன்வைத்தார். எனவே உடனடியாக ஐ.நா மனித உரிமைகள் உப ஆணைக்குழு சிறிலங்கா நிலையை கருத்தில் எடுத்து இதனை ஆராய்வதற்கான வழிகளை முன்னெடுக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்தார். இவரிற்கு முன்னர் பேசிய மக்களின் உரிமைக்கும் விடுதலைக்குமான சர்வதேச நிறுவனத்தின் பிரதிநிதி திருமதி வெரீனா கிராவ் சிறிலங்காவில் சட்ட ஒழுங்கு நிலை படிப்படியாக அரசியல் மயப்படுத்தப்பட்டு, இராணுவ மயப்படுத்தப்பட்டு இன்று சீரழிந்துவருகின்றது எனச்சாடினார். செம்மணி உட்பட பல கோரமான விவகாரங்களை அவர் இதற்காகப் பட்டியலிட்டு மிக தாக்கமான உரையினை ஆற்றினார். பல உலக நாடுகளின் பிரதிநிதிகளும், சர்வதேச மனித உரிமைகள் நிபுணர்களும் அவரது உரையினை கூர்ந்து கேட்டுக்கொண்டிருந்தனர். ஆணைக்குழுமுன் உரையாற்றிய இன்ரர் பேத் இன்ரர்நசனல் எனும் சர்வதேச நிறுவனத்தின் பிரதிநிதி கலாநிதி சால்ஸ் கிராவ் அவர்கள் புலிகள் மிக வெளிப்படையான முறையில் இணக்கப் பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்கையில் சிறிலங்கா சனாதிபதி அமைச்சர்களை தூக்கியெறிந்தும், பாராளுமன்றத்தைக் கலைத்தும் இணக்கச் சூழலைக் குழப்புகின்றார் எனச் சுட்டிக்காட்டினார். சமாதானச் சூழல் நிலவிய போதும் எதுவித பொருண்மிய முன்னேற்றங்களும் அற்ற நிலையில் தமிழ் மக்கள் எவ்வளவு காலம் பொறுமையாக இருப்பார்கள் என்கின்ற கேள்வி பெரிதாக எழும்பியுள்ளதாகத் தெரிவித்தார். இவ்வாணைக் குழுவிடம் தமிழ் மக்களின் பொருண்மிய சமூக கலாசார உரிமைகள் தொடர்பான மனுவொன்றை அனைத்துலக தமிழர் கூட்டமைப்பு கையளிக்கவுள்ளது. இம்மனுவானது இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வாழும் தமிழ் மக்களின் பொருளாதார சமூக கலாச்சார உரிமைகளை சிறிலங்கா தொடர்ந்தும் நிராகரிப்பது தொடர்பாக ஆராய்ந்துள்ளது. 1975இல் உருவாக்கப்பெற்று சிறிலங்காவும் கைச்சாத்திட்டுள்ள பொருண்மிய சமூக மற்றும் கலாச்சார உரிமைகளுக்கான சர்வதேச உடன்படிக்கையின் கீழ் தமிழ் மக்கள் தமக்கான நிர்வாக அமைப்பைப் பெறும் உரிமைகள் கொண்டவர்கள் என சுட்டிக்காட்டியுள்ளது.

## புலிகள்...

இச்சந்திப்பின்போது தமிழீழ விடுதலைப்புலிகள் சார்பில் மட்டு. அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன், 'அம்பாறை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் குயிலின்பன்', அம்பாறை மாவட்ட தமிழர் மேம்பாட்டுப் பேரவையின் தலைவர் நடராசா, தர்மலிங்கம் ஆகியோரும் முஸ்லிம்கள் சார்பில் அம்பாறை மாவட்ட அனைத்துப் பள்ளிவாசல்களின் சம்மேளனப் பொதுச் செயலாளர் அஜீத் இப்பிராகிம் தலைமையில் தென்கிழக்குப் பல்கலைக் கழக விரிவுரையாளர் மௌலவி ஹறீம் ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர்.

இதேவேளை நீண்டகாலமாக இத்தகைய சந்திப்புக்கள் நடைபெறாத போதிலும் அம்பாறை மாவட்டத்தில் தமிழ் முஸ்லிம் நல்லுறவுகள் சீராகப் பேணப்பட்டு வந்துள்ளமை குறித்து இருதரப்பினரும் திருப்தி தெரிவித்ததுடன்.

எதிர்காலத்திலும் இதே நல்லுறவுகளை ஏற்படுத்தும் நடவடிக்கைகளை மேற்கொள்வதென முடிவெடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

வட்டமடு, செங்கமை முதலான விவசாயக் காணிகளில் எதிர்வரும் பெரும் போகச் செய்கையினை மேற்கொள்வதற்கு முஸ்லிம்களுக்கு வாக்களிக்கப்பட வேண்டுமென முஸ்லிம் பிரதிநிதிகள் தமது கோரிக்கையினை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை இத்தகைய சந்திப்பு எதிர்வரும் ஓகஸ்ட் 16 ஆம் திகதி அக்கரைப்பற்றிலுள்ள தமிழர் மேம்பாட்டுப் பேரவையில் அலுவலகத்தை நடத்துவதென முடிவெடுக்கப்பட்டுள்ளதாக அங்கிருந்த கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ஆம் ஆண்டு யூலை மாதம் 29ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.